Philip Junior Book 2

காயா? பழமா?

வேதாகமக் கழகம்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

காயா?
பழமா?

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப்
போதித்தருளும். நீரே என் தேவன். உம்முடைய
நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே
நடத்துவாராக

சங்கீதம் : 143:10

BIBLE LEAGUE

(A Project of Board for Evangelism and Social Action)

Copyright © 2004 Bible League

Book Title	:	RAW OR RIPE ? (PJ-II)
Language	:	Tamil
Printed at	:	Scantrans India (Pvt.) Ltd., Chennai.
Sources used	:	Holy Bible - Tamil (RV)
Published by	:	Board for Evangelism and Social Action
No. of Copies	:	25,000

(For Private Circulation only)

நற்செய்தி அறிவிக்க உபயோகப்படும் நூல்கள் மற்றும் பயிற்சி உங்களுக்குத் தேவையானால் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

BIBLE LEAGUE

Post Box - 177,

Trichy - 620 001, Tamil Nadu - India.

பொருளடக்கம்

பக்கம்

1. காயா! பழமா! ....(07)

2. ஆண்டவர் என்னோடு பேசுவாரா? ....(11)

3. என் கூப்பிடுதலையும் கேட்பாரா? ....(17)

4. எங்கே என் பிரண்ட்ஸ்? ....(23)

5. என் ஹீரோ எங்கே? ....(29)

6. இதோ மூளைக்கு வேலை? ....(37)

7. எனக்குப் பிறன் யார்? ....(41)

8. பொறுத்தது போதுமா? ....(45)

9. இன்பமா? இழப்பா? ....(53)

10. என்னதான் செய்வது? ....(61)

என்னுடன் இணைந்து இப்புத்தகத்தை படிப்பவர்களின் பெயர்கள்

எண்	பெயர்	பிறந்த நாள்

காயா? பழமா?

ஹலோ உங்களுடன்!

அன்புத் தம்பிகளே! தங்கைகளே! காயா? பழமா? என்ற இப்புத்தகத்தை படிக்க வந்துள்ள உங்களை வாழ்த்தி வரவேற்கிறோம். நீங்கள் படித்து முடித்த **பயணம் எங்கே?** என்ற புத்தகத்தில் உங்களது மனதில் தோன்றிய கேள்விகளுக்கு விடை கண்டதுடன்,ஆண்டவரையும் ஏற்றுக்கொண்டிருப்பீர்கள். இந்த புத்தகத்தின் நோக்கம் உங்கள் குணங்களில் மாற்றம் ஏற்பட்டு ஆண்டவருக்கு பிரியமுள்ள சீடராக மாறவேண்டும் என்பதும் மேலும் உங்களின் மனதில் உள்ள இன்னும் சில கேள்விகளுக்கு விடை காண்பதே ஆகும்.

இந்த புத்தகத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்தியவரின் துணையைக்கொண்டு குழுவாக மட்டுமே கற்க வேண்டும் ஒருவரிலிருந்து ஒருவர் கற்றுக்கொண்டு குழுவாக வளரவேண்டும் என்பதே இப்புத்தகம் எழுதப்பட்டதன் நோக்கம் ஆகும். இப்புத்தகத்தை படித்து முடித்தவுடன் அழகிய பெரிய சான்றிதழும், குறைந்த விலையில் முழு வேதாகமமும் கிடைக்கும்.

1. காயா? பழமா?

முன்னுரை

நாம் பல நண்பர்களுடன் நட்பு வைத்திருப்போம். என்றாவது ஒருநாள் நமக்கும், நம் நண்பருக்கும் உள்ள உறவில் தடைபடும் நேரம் வருவதுண்டு. அப்பொழுது நமது நண்பருடன் உறவைத் தொடர இரண்டு விரலை ஒன்றோடு ஒன்றாக வைத்து வளைத்து குறிப்பிட்ட விரலை பழமாக குறிப்பிட்டு காயா? பழமா? என நண்பரிடம் கேட்போம்.

அவர் காய் எனக் குறிப்பிட்ட விரலைத் தொட்டால் அவர் நம்முடன் உறவைத் தொடர விரும்பவில்லை என முடிவு செய்வோம். பழம் என்று குறிப்பிட்ட விரலைத்தொட்டால் நண்பர் நம்முடன் நட்பைத்தொடர விரும்புகிறார் என முடிவு செய்வோம். இதிலிருந்து நாம் காய் என்பதை விரும்பத்தகாத செயலுக்கும், பழம் என்பதை விரும்பத்தகுந்த செயலுக்கும் ஒப்பிடுகிறோம். நமக்கு தட்டில் ஒரு பழத்தையும், அதனுடைய காயையும் வைத்தால் நாம் பழத்தைத்தான் தேர்ந்தெடுப்போம். ஏனென்றால் பழம் காயைவிட இனிமையானது.

பழம் என்பதை கனி என்றும் கூறலாம். நமது ஆண்டவரும் கூட நாம் பிறருக்கு கனி கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும் என விரும்புகிறார். கனி கொடுத்தல் என்பது நமது செயல்களின்மூலம் பிறருக்கு பிரயோஜன முள்ளவர்களாக இருப்பதே ஆகும்.

கனியிலும் நல்ல கனி, கெட்ட கனி என இருவகை உண்டு. நல்ல மரத்திலிருந்து நல்ல கனி கிடைக்கும். கெட்ட மரத்திலிருந்து கெட்டகனி கிடைக்கும். வேப்ப மரத்திலிருந்து நாம் சுவையான மாம்பழத்தை பெறமுடியாது. இது நமது வாழ்க்கைக்கும் பொருந்தும்.

நமது உறவு நல்லவர்களோடு இருந்தால் நாமும் நமது செய்கைகள் மூலம் பிறருக்கு நல்ல கனியைக் கொடுப்போம். நமது உறவு தீயவர்களோடு இருந்தால் நாமும் நமது செய்கைகளின் மூலம் பிறருக்கு தீய கனியைக் கொடுப்போம்.

இன்று நமது ஆண்டவர் நம்மை நோக்கி காயா? பழமா? எனக் கேட்கிறார். பழம் என்று கூற நாம் தயார் தானே!

பாடல் :

அகிலத்தையும் ஆகாயத்தையும்...

ஜெபம் :

அன்புள்ள ஆண்டவரே, பேசும். வேதாகமத்தைப் புரிந்துகொள்ள உதவிச் செய்யும். ஆமென்!

வேதபகுதி :

யோவான் 15:1-12

இந்தப் பகுதியில் இயேசு தம்மை திராட்சைச்செடிக்கும், நம்மை திராட்சைக் கொடிகளுக்கும் ஒப்பிட்டு உவமையாக கூறுகிறார்.

1. ....திராட்சைச்செடி
   ....திராட்சைக்கொடி
   (வசனம் 1,5)

2. அதிக கனிகளைக் கொடுத்தல் என்றால் என்ன?

   ....
   ....
   ....
   ....

3. யார்மேல் அன்பாயிருக்க வேண்டும் என்று இயேசு கூறினார்?

....

....

4. நாம் மற்றவரோடு அன்பாக இருக்கும்போது பிறருக்கு தீய கனிகளைக் கொடுப்போமா?

....

....

செயல்படும் நேரம் :

கடந்த வாரத்தைப்பற்றி யோசித்துப்பார். ஆண்டவருக்கு பிரியமாய் நடந்த செயல்களையும், அவரை வருத்தப்படுத்தின செயல்களையும் எழுது.

எண்.	**ஆண்டவரை நான் பிரியப்படுத்தின செயல்கள்**	**ஆண்டவரை நான் வருத்தப்படுத்தின செயல்கள்**
1.		
2.		
3.		
4.		
5.		

கொலோசெயர் 3:5,6

தீமை, பாலியல் குற்றம், பாவ காரியங்களின் ஆளுகைக்கு உள்ளாகுதல், மோகம், தீய ஆசைகள் போன்ற உங்கள் பாவங்களை வாழ்விலிருந்து விலக்குங்கள். போலியான கடவுளுக்குச் சேவை செய்வது என்பதே இவ்விருப்பங்களின் உண்மை அர்த்தம். இவை தேவனைக் கோபப்படுத்தும்.

1 தெசலோனிக்கேயர் 5:15

ஒருவரும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். ஒருவருக்கொருவர் எப்பொழுதும் நன்மை செய்துகொள்ளவும், எல்லாருக்கும் நன்மை செய்யவும் முயலுங்கள்.

நான் தேவனோடு உள்ள உறவில் இணைந்தும், பிறருக்கு பிரயோஜனமாகவும் மாற இன்று முதல் கீழ்க்கண்டவற்றை செய்ய தீர்மானித்துள்ளேன்.

1. இன்று முதல் நான் ....
2. இன்று முதல் நான் ....

மனப்பாட வசனங்கள்

எபேசியர் 2:10

நாம் எப்படி இருக்கிறோமோ அப்படியே தேவன் நம்மை படைத்தார். நாம் நற்செயல்கள் செய்யும்படி கிறிஸ்துவுக்குள் நம்மைப் புதிய மக்களாக்கினார். தேவன் ஏற்கனவே நமக்காக அந்நற்செயல்கள் பற்றித் திட்டமிட்டிருக்கிறார். நமது வாழ்வு அந்நற்செயல்களோடு இணைய வேண்டும் என்றே தேவன் திட்டமிட்டிருக்கிறார்.

2 கொரிந்தியர் 5:17

எவராவது கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புதிதாகப் படைக்கப்பட்டவனாகிறான். பழையவை மறைந்தன. அனைத்தும் புதியவை ஆயின.

இறுதி ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே! இன்று முதல் நாங்கள் ஒவ்வொருவரும் உம்மில் நிலைத்திருக்கவும், பிறருக்கு பிரயோஜனமுள்ளவர்களாக இருக்கவும் உதவிபுரியும். ஆமென்!

2. ஆண்டவர் என்னோடு பேசுவாரா?

முன்னுரை

நாம் வாழும் வாழ்க்கை மற்றவரோடு உறவு சார்ந்து வாழும் வாழ்க்கை. நாம் மற்றவரோடு உறவு இல்லாமல் வாழ முடியாது.

அம்மா, அப்பா, நண்பர் என பல்வேறு உறவுமுறைகள் இருக்கலாம். அவர்கள் உங்களோடு ஒருமுறை பேசாவிட்டால் உங்களுக்கு தலையே வெடித்துவிடுவது போன்று தோன்றி இருக்கும். உங்களுக்குப் பிரியமான நபர் ஒருவர் உங்களோடு பேசாதபோது, வருத்தமாயிருக்கும்போது உங்களை நேசித்து தன்னுடைய குடும்பத்தில் ஒரு நபராக சேர்த்துவிட்ட ஆண்டவர் என்னோடு பேசுவாரா? என்ற கேள்வி எழக்கூடும். உங்களது அப்பா எப்படி உங்களோடு பேச விரும்புகிறாரோ அதேபோல பரம தகப்பனாகிய ஆண்டவரும் நாள்தோறும் உங்களோடு பேச விரும்புகிறார். அவரது பேச்சை நீங்கள் கேட்டு நடக்க வேண்டுமென்று விரும்புகிறார். ஆண்டவர் என்னோடு எப்படி பேசுவார்?

ஆண்டவர் தாம் நேசிக்கும் மக்களோடு பல்வேறு விதங்களில் பேசுகிறார். தீர்க்கதரிசனங்கள், சொப்பனங்கள், தரிசனங்கள், தன்னுடைய ஊழியர்கள் மூலம் மக்களோடு பேசினாலும் பிரதானமாக நமக்கு பரிசாக ஆண்டவர் வழங்கியுள்ள **வேதத்தின் மூலம்** மக்களோடு பேசி வருகிறார்.

பரிசுத்த வேதாகமானது தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டு தேவ மனிதர்களால் எழுதப்பட்டு இன்று நம்முடைய கரங்களில் வந்துள்ளது. வேதமானது அநேகருடைய வாழ்க்கையை மாற்றியுள்ளது. அநேகருக்கு புதிய உற்சாகத்தை, நம்பிக்கையை கொடுத்துள்ளது. கஷ்ட

நேரத்தில் ஆறுதல்படுத்தியுள்ளது. அதை நாள்தோறும் ஒழுங்கும், கிரமுமாக படிக்கும்போது ஒவ்வொரு நாளும் ஆண்டவர் உங்களோடு பேசுவதை உணர முடியும்.

வேதத்தின் மூலமே ஆண்டவர் தன்னை முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார். பரிசுத்த வேதாகமத்தில் இன்று உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியின் கேள்விகளுக்கும், நாட்டில் உள்ள பிரச்சனைகள், தேவைகள் மற்றும் அனைத்து விஷயங்களுக்கும் பதில் உண்டு.

பரிசுத்த வேதாகமத்தில் 66 புத்தகங்கள் உள்ளன. ஏறக்குறைய 1600 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் 40 ஆசிரியர்களால் எழுதப்பட்டது. கிறிஸ்துவின் பிறப்பை அடிப்படையாக வைத்து அதற்கு முன்னால் எழுதப்பட்ட புத்தகங்கள் பழைய ஏற்பாடு என்றும், கிறிஸ்துவின் பிறப்பிற்கு பின்னால் எழுதப்பட்ட புத்தகங்கள் புதிய ஏற்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. (ஏற்பாடு என்றால் உடன்படிக்கை என்று பொருள். அதாவது தேவன் மனிதனோடு ஏற்படுத்திய உடன்படிக்கை எனலாம்).

பரிசுத்த வேதம் ஆண்டவரின் துணையோடு எழுதப்பட்டதால் ஆண்டவரின் துணையோடுதான் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

பாடல் :

இயேசு என்னும் நாமத்தில்...

ஜெபம் :

அன்புள்ள ஆண்டவரே! உம்முடைய வேதத்தைக்குறித்து அறிந்துகொள்ளவும், நீர் எங்களோடு பேசுவதை கேட்கவும் விரும்புகிறோம். நீர் எங்களுடன் பேசும் ஆமென்!

2 தீமோத்தேயு 3:16,17

16. அனைத்து வேதவாக்கியங்களும் தேவனால் கொடுக்கப்பட்டவை. இவை போதிக்கப் பயன்படும். வாழ்வில் தவறு செய்கின்றவர்களுக்கு வழிகாட்டும். இது தவறுகளைத் திருத்தி நல்வழியில் வாழத் துணை செய்யும்.

17. வேத வாக்கியங்களைப் பயன்படுத்தி, தேவனுக்கு சேவை செய்கிறவன், ஆயத்தமுள்ளவனாகவும், ஒவ்வொரு நல்ல வேலைக்கும் தேவையான அனைத்தையும் உடையவனாகவும் இருப்பான்.

சங் 119 : 97-105

97. கர்த்தாவே, நான் உமது போதனைகளை நேசிக்கிறேன். எல்லா வேளைகளிலும் நான் அவற்றைக் குறித்துப் பேசுகிறேன்.

98. கர்த்தாவே, உமது கட்டளைகள் என்னை என் பகைவரைக் காட்டிலும் ஞானமுள்ளவனாக்கும். உமது சட்டம் எப்போதும் என்னோடிருக்கும்.

99. உமது உடன்படிக்கையை நான் கற்பதால் என் ஆசிரியர்களைக்காட்டிலும் நான் ஞானமுள்ளவன்.

100. நான் உமது கட்டளைகளின்படி நடப்பதால், முதியத் தலைவர்களைக்காட்டிலும் அதிகமாகப் புரிந்துக் கொள்கிறேன்.

101. வழியில் ஒவ்வொரு அடியிலும் நான் தவறான பாதையில் செல்லாதபடி காக்கிறீர். எனவே, கர்த்தாவே, நீர் கூறுகின்றவற்றை நான் செய்ய முடிகிறது.

102. கர்த்தாவே, நீரே என் ஆசிரியர். ஆகையால் உமது சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதை நிறுத்த மாட்டேன்.

103. என் வாயிலுள்ள தேனைக்காட்டிலும் உமது வார்த்தைகள் சுவையானவை.

104. உமது போதனைகள் என்னை ஞானமுள்ளவனாக மாற்றின. எனவே நான் தவறான போதனைகளை வெறுக்கிறேன்.

105. கர்த்தாவே, உமது வார்த்தைகள் என் பாதைக்கு ஒளிகாட்டும் விளக்காகும்.

கேள்விகள்

1. வேதவசனத்தைத் .... கொடுத்தார். இது .... வார்த்தை.

2. அவருடைய.. கைக்கொள்ளும்போது .... ஞானமுள்ளவனாகலாம் (வசனம் 100)

சங்கீதம் 1:1-4

1. தீய ஜனங்களின் அறிவுரையைக் கேளாமலும், பாவிகளைப்போன்று வாழாமலும், தேவனை மதிக்காத ஜனங்களோடு சேராமலும் இருக்கிற மனிதன் உண்மையிலே மகிழ்ச்சியாக இருப்பான்.

2. ஒரு நல்ல மனிதன் கர்த்தருடைய போதனைகளை நேசிக்கிறான். அவற்றைக் குறித்து அவன் இரவும் பகலும் தியானிக்கிறான்.

3. அம்மனிதன் நீரோடைகளின் கரையில் நடப்பட்ட ஒரு மரத்தைப்போன்று வலிமையுள்ளவனாக இருக்கிறான். தக்க சமயத்தில் பலன் தருகிற மரத்தைப்போல் அவன் காணப்படுகிறான். உதிராமலிருக்கிற இலைகளைக் கொண்ட மரத்தைப்போல் அவன் இருக்கிறான். அவன் செய்கின்ற செயல்கள் எல்லாவற்றிலும் அவன் வெற்றி பெறுவான்.

4. ஆனால் தீயோர் அப்படியிரார்கள். அத்தீய ஜனங்கள் காற்றில் பறக்கிற உமியைப் போன்றவர்கள்.

3. வேதத்தில் தியானமாயிருத்தல் என்றால் என்ன?

....

....

4. வேதத்தை தியானிக்கிற மனுஷன் எப்படி இருப்பான்?

....

....

வேதத்தை எப்படி படிக்க வேண்டும் ?

1. ஜெபியுங்கள்

வேதாகமானது மற்ற புத்தகங்களைப் போல எளிதில் சுயமாக கற்றுக்கொள்ள முடியாது. வேதமானது தேவனால் அருளப்பட்டது. ஆண்டவர் நமக்கு விளக்கித்தரும்படி முதலாவது ஜெபியுங்கள்.

2. குறிப்பிட்ட பகுதியை திரும்பத்திரும்ப வாசியுங்கள்

மெதுவாக அர்த்தத்தை உணர்ந்து நாம் படிக்கும்போது ஆண்டவர் நமக்கு விளக்கித்தருவதை உணரலாம். இரண்டாவது படிக்கும்போது முதலாவது வாசித்ததைவிட சில காரியங்கள் புரிவதை நாம் உணர முடியும்.

3. இந்தப்பகுதியில் இருந்து ஆண்டவர் எனக்கு என்ன கற்றுத் தர விரும்புகிறார்? என கேட்டு சிந்தியுங்கள்.

4. கற்றதின்படி நடக்க முடிவு எடுங்கள்.

செயல்படும் நேரம்

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான விடைகளுக்கு நேரே உள்ள கட்டத்தை டிக் (✓) செய்யவும்.

1. ஆண்டவரின் பிள்ளைகளாகிவிட்ட நாம் அவருக்குள் வளருவதற்கு நாம் செய்ய வேண்டிய முதல்படி

- ❑ நல்ல சத்தான ஆகாரங்களை சாப்பிட வேண்டும்.
- ❑ தினமும் வேதத்தை வாசிக்க வேண்டும்.
- ❑ ஒரு சபையில் உறுப்பினராக வேண்டும்
- ❑ சபைக்கு நிறைய பணம் கொடுக்க வேண்டும்.

2. சங்கீதம் 119:11 ல் நான் மிகவும் கவனமாக உமது போதனைகளைக் கற்றுக்கொள்ளுகிறேன் என்றால் அர்த்தம் என்ன?

- ❑ வேத வசனத்தை மனப்பாடம் செய்வது.
- ❑ வேதாகமத்தை தலைக்கு அடியில் வைத்து படிப்பது.
- ❑ வேதாகமத்தை யாரும் பார்க்காத இடத்தில் வைப்பது.

இறுதி ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே! உம்முடைய வசனத்தின் மூலம் இன்று எங்களோடு பேசியதற்காக நன்றி. உம்முடைய வேதத்தை சரியான முறையில் கற்கவும், புரிந்து கொள்ளவும் ஞானம் தாரும். நாங்கள் தனிப்பட்ட முறையிலும், குழுவாகவும் உம்முடைய சத்தத்தைக் கேட்டு அதன்படிச் செய்ய உதவிச் செய்யும். ஆமென்!

3. என் கூப்பிடுதலையும் கேட்பாரா?

முன்னுரை

அன்பு தம்பிகளே! தங்கைகளே! என்றாவது ஒருநாள் உங்களுக்கு மிகவும் பிடித்த உங்களது நண்பர் நீங்கள் பேசியதை சரியாக காதுகொடுத்து கேட்கவில்லை என மனம் வருந்தியது உண்டா? ஏன் வருத்தம் அடைந்தீர்கள்? உங்களுக்கு பிரியமானவர் கண்டுகொள்ளாமல் சென்றுவிட்டார் என்றுதானே.

உங்கள் அம்மா, அப்பாவிடம் ஒருநாள் முழுவதும் பேசாமல் இருப்பதாக கற்பனை செய்து பாருங்கள். அந்தநாள் உங்களுக்கு எப்படி இருக்கும்? அதேபோல் நம் பரம அப்பாவாகிய ஆண்டவர் ஒவ்வொருநாளும் நாம் அவரோடு பேச வேண்டுமென்று விரும்புகிறார். நாம் ஒருநாளாவது பேசத் தவறினால் அவர் மிகவும் மனவருத்தம் அடைவார். நாம் அவரோடு ஒவ்வொரு நாளும் பேசும்போது மட்டுமே நாம் என்ன செய்ய வேண்டும்? பேச்சு, செயல், நடக்கை, சிந்தனை என எந்தப்பகுதியில் ஆண்டவருக்கு பிரியமாக நடக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துவார்.

1. ஏன் ஜெபிக்க வேண்டும்?

நாம் நமது நண்பர்களுடன் உள்ள உறவு நீடிக்க, உறுதியாக இருக்க நாம் அடிக்கடி அவர்களோடு பேசுகிறோம். அதைப்போல ஆண்டவரோடு உள்ள நமது உறவும் நீடிக்க நாம் நாள்தோறும் அவருடன் பேச வேண்டும்.

2. எப்படி பேசுவது?

நாம் தேவனோடு பேசுவதை ஜெபம் என்கிறோம். ஜெபம் என்பது மகன் தந்தையோடு பேசுவதைப் போன்றது. நீங்கள் உங்கள் அப்பா, அம்மாவோடு எப்படி பேசுவீர்களோ அதைப்போல ஆண்டவரிடம் நீங்கள் பேசலாம். அதோடு கீழ்க்கண்ட முறையில் ஆண்டவரோடு உரையாடினால் மிகவும் நன்றாயிருக்கும்.

1. முதலாவது துதியுங்கள்

தகுதியுள்ள ஒரு நபரை நாம் புகழும்போது அவருடைய மனம் மகிழும். இதைப்போல ஆண்டவர் நமக்கு செய்த காரியங்கள், அவருடைய சிறப்பம்சங்கள், அவருடைய குணாதிசயங்கள் போன்றவற்றைப்பற்றி நாம் புகழ்ந்து கூறும்போது ஆண்டவருடைய மனம் மகிழும்.

எடுத்துக்காட்டாக

(i) கர்த்தர் நல்லவர், எனவே அவரைத் துதியுங்கள். அவரது உண்மை அன்பு என்றென்றும் தொடரும். (சங் 136:1)

ஆண்டவர் நல்லவராக இருப்பதால் "நல்லவரே" எனத் துதியுங்கள்

(ii) வானங்களை உண்டாக்குவதற்கு ஞானத்தைப் பயன்படுத்திய தேவனைத் துதியுங்கள்! அவரது உண்மை அன்பு என்றென்றும் தொடரும் (சங் 136:5)

வானங்களை ஞானமாய் "படைத்தவரே" எனத் துதியுங்கள்

மேலும் வேதத்தைப் படிக்கும்போது ஆண்டவரைப்பற்றி என்ன சொல்லப்பட்டுள்ளதோ அதை ஒரு நோட்டில் குறித்து வைத்து அதை சொல்லி துதிக்கவும்.

2. பாவத்தை அறிக்கையிடுங்கள்

ஆண்டவர் ஒரு குறையும் இல்லாதவர். அவரிடத்தில் பாவம் என்பதே கிடையாது. ஆண்டவருடன் உள்ள நமது உறவும் தடைபடாமல் இருக்க நாம் பாவ மன்னிப்பு பெறவேண்டியது அவசியம். எனவே ஆண்டவருக்கு பிரியமில்லாமல் செய்த காரியங்களை அறிக்கையிடுங்கள்.

3. நன்றி செலுத்துங்கள்

நண்பர் உங்களுக்கு செய்த உதவிக்கு நீங்கள் நன்றி கூறாவிடில் உங்கள் நண்பர் என்ன இவன் ஒரு நன்றி என்றுகூட சொல்லவில்லை என்று மனவருத்தம் அடைவார். அதைப்போல ஆண்டவருக்கும் நீங்கள் நன்றி செலுத்த வேண்டும்.

4. விண்ணப்பியுங்கள்.

உங்களுக்கு என்ன தேவை என்பதை நீங்கள் ஆண்டவருக்குத் தெரிவியுங்கள்.

மேலே கூறப்பட்டுள்ள நான்கு அம்சங்களும் சேர்ந்ததுதான் ஜெபம். சில ஜெபங்களுக்கு உடனே பதில் ஆம் என்று ஆண்டவர் கூறுவார். சில ஜெபங்களுக்கு காத்திரு என பதில் வரலாம். சில ஜெபங்களுக்கு இல்லை என பதில் வரலாம்.

பாடல் :

இயேசுவின் பின்னே...

ஜெபம் :

குழுத்தலைவரோ அல்லது விரும்புகின்ற நபர் ஒருவரோ ஜெபிக்கலாம்.

சிந்திக்கும் நேரம்

மத்தேயு 6:5-13

1. ஆயக்காரர் எப்படி ஜெபித்தனர்? (வசனம் 5)

....

....

....

....

2. நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்? (வசனம் 6)

....

....

3. நாம் எப்படி ஜெபிக்கக்கூடாது? (வசனம் 7)

....

....

4. நான் என்ன வேண்டிக்கொள்ளப்போகிறேன் என்று ஆண்டவருக்குத் தெரியுமா? (வசனம் 8)

....

....

5. இயேசு கற்பித்த பரமண்டல ஜெபத்தில் என்னென்ன பகுதிகள் உண்டு? (வசனம்9-13)

   1. து__த்__ல்

   2. வி__ண__ப__

   3. பாவ__ன்__ __பு

செயல்படும் நேரம்

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியா? தவறா? என வட்டமிடு.

1. ஜெபம் என்பது ஆண்டவரோடு பேசுவது.

சரி / தவறு.

2. நாம் எந்த இடத்தில் வேண்டுமானாலும் ஜெபிக்கலாம்.

சரி / தவறு.

3. நாம் உண்மையாக ஜெபித்தால் மட்டுமே ஆண்டவர் கேட்பார்.

சரி / தவறு.

4. சில நேரம் நாம் ஆண்டவரிடம் கேட்டவற்றிற்கு காத்திரு என வரலாம்.

சரி / தவறு.

5. நாம் வேண்டுவது அனைத்தும் கிடைக்கும்.

சரி / தவறு.

6. ஆண்டவருக்கு உங்களுடைய பிரச்சனை குறித்து அக்கறை இல்லை.

சரி / தவறு.

7. நம்முடைய ஜெபத்தில் செய்த தவறுகளுக்காக மன்னிப்பு கேட்கும்பொழுது ஆண்டவர் மன்னிக்கமாட்டார்.

சரி / தவறு.

மனப்பாட வசனம்

பிலிப்பியர் 4:6

நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு வேண்டிய எல்லாவற்றுக்காகவும் தேவனிடம் பிரார்த்தனை செய்து கேளுங்கள். நீங்கள் பிரார்த்தனை செய்யும்பொழுதெல்லாம் நன்றி செலுத்துங்கள்.

தீர்மானம்

நான் இன்றுமுதல் ஒவ்வொரு நாளும் தவறாமல் என் ஆண்டவரோடு பேசுவேன்

துதிக்க

1...

2...

ஜெபிக்க

1...

2...

(குழுத்தலைவர் ஒவ்வொரு குறிப்புக்காக ஜெபியுங்கள்)

இறுதி ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே! இன்றுமுதல் நாங்கள் தனிப்பட்ட முறையிலும், குழுவாகவும் உங்களோடு பேச, உறவாட உதவிபுரியும். இயேசுவின் மூலம் ஜெபம் கேளும் பிதாவே. ஆமென்!

4. எங்கே என் பிரண்ட்ஸ் ?

ஜெபம் :

குழுத்தலைவரோ (அல்லது) விரும்புகின்ற நபர் ஒருவர் ஜெபிக்கலாம்

முன்னுரை

"உன் நன்பனைப்பற்றிக்கூறு. நீ எப்படிப்பட்டவன் என நான் கூறுகிறேன்" என்ற ஒரு பழமொழி உண்டு. நம்முடைய நண்பன் எப்படியோ அப்படித்தான் நாமும் இருக்க முடியும். ஆண்டவருக்கு, பிரியமுள்ள பிள்ளையாக வாழ நமக்கு ஆண்டவருடைய பிள்ளைகளின் உறவு அவசியம். ஆண்டவருடைய பிள்ளைகள் நண்பர்களாக, குழுவாக இருக்கும்போது ஒருவருக்கொருவர் ஜெபிக்க, ஒருவரிலிருந்து ஒருவர் நல்ல குணங்களைக் கற்றுக்கொள்ள உதவ முடியும். தொடர்ந்து ஆண்டவருக்கு அடுத்த காரியங்களில் முன்னேறிச் செல்ல உதவும்.

உங்கள் வகுப்பில் 4 மாடுகள் கூட்டமாக மேயும்போது கொல்லமுடியாத சிங்கம் தனித்தனியாக பிரிந்து மேயும்போது எளிதில் கொன்றுவிடும் சம்பவத்தை கதையாக படித்திருப்பீர்களே! அதுபோல ஆண்டவரின் பிள்ளைகள், நண்பர்கள் குழுவாக நாம் வாழும்போது எளிதில் நம்மைத் தோற்கடிக்க நினைக்கும் சாத்தானிடமிருந்து வெற்றிபெறமுடியும். குழுவாக நாம் வளரும்போது தனித்தனியாக நாம் வளருவதோடு நம்முடைய குழுவும் வளரும்.

பாடல் :

என் இயேசுவால் ஆகாததொன்றுண்டோ...

ஜெபம் :

அன்புள்ள ஆண்டவரே! இன்றைக்கு நாங்கள் எங்கே என் பிரண்ட்ஸ்? என்றபாடத்தை கற்றுக்கொள்ள வந்திருக்கிறோம். கற்றுக்கொள்ள ஞானத்தைத் தாரும். எங்களோடிரும். இயேசுவின் மூலம் ஜெபிக்கிறோம் பிதாவே, ஆமென்.

வேதபகுதி அப்போஸ்தலர்: 17:10-12

10. அதே இரவில் விசுவாசிகள் பவுலையும் சீலாவையும் பெரேயா எனப்பட்ட மற்றொரு நகரத்திற்கு அனுப்பினர். பெரேயாவில் பவுலும் சீலாவும் யூதர்களின் ஜெப ஆலயத்திற்குச் சென்றனர்.

11. தெசலோனிக்கேயின் யூதர்களைக் காட்டிலும் இந்த யூதர்கள் சிறந்தவர்களாக இருந்தனர். பவுலும் சீலாவும் கூறியவற்றை இந்த யூதர்கள் மிகுந்த ஆர்வமுடன் வரவேற்றார்கள். பெரேயாவின் யூதர்கள் ஒவ்வொரு நாளும் வேத வாக்கியங்களைக் கற்றார்கள். இக்காரியங்கள் உண்மையானவையா என்று அறிய இந்த யூதர்கள் விரும்பினார்கள்.

12. இந்த யூதர்களில் பலர் நம்பிக்கை கொண்டனர். உயர் நிலையிலிருந்த பல கிரேக்கப் பெண்களும் ஆண்களைப் போலவே நம்பிக்கை கொண்டனர்.

1. பெரேயா ஊர் நண்பர்கள் எதற்காக ஒன்று கூடினர்?

....

....

....

....

2. வசனத்தை ....ஏற்றனர்.

3. அதன் விளைவாக ....மாறியது .
....வளர்ந்தது.

செயல்படும் நேரம்

ராமுவுக்கு யாருடன் சேர்ந்தால் நல்லவனாக வாழ முடியும். வழி காட்டுங்களேன்.

நல்ல நண்பனை ராமுவுக்கு காட்டுங்களேன்

- எப்போதும் சண்டைபோடும் பிரேம்
- கெட்ட பழக்கம் உள்ள உடன் மாணவன்
- தவறு செய்பவன்
- பிறரை மதிக்காத முகேஷ்
- இயேசுவின் பிள்ளையாக வசனத்தின்படி வாழும் குமார்

நல்ல நண்பனை ராமுவுக்கு காட்டுங்கள்

எப்போதும்
சண்டைபோடும் பிரேம்

பிறரை மதிக்காத
முகேஷ்

இயேசுவின் பிள்ளையாக வசனத்தின்படி
வாழும் குமார்

தவறு செய்பவன்

கெட்ட பழக்கம் உள்ள
உடன் மாணவன்

சிந்தனைக்கு

ஆண்டவரின் பிள்ளையாகிவிட்ட நாம் நல்ல நண்பர்களைப் பெற எங்கு செல்ல வேண்டும்?

- தேவாலயம்
- ஞாயிறு பாடசாலை
- விடுமுறை வேதாகமப் பள்ளி
- இந்தக்குழு
- மேற்கண்ட அனைத்தும்

3. கீழேயுள்ள கட்டங்களில் உன் நண்பன் பெயரையும், அவனை நண்பனாக தெரிந்து கொண்ட காரணத்தையும் எழுது.

நண்பனின் பெயர்	அவனிடமுள்ள சிறந்த குணம்
....	....
....	....
....	....
....	....

மனப்பாட வசனங்கள்

பிரசங்கி 4:9,12

9. ஒருவனாக இருப்பதைவிட இரண்டு பேராக இருப்பது நல்லது. இரண்டு பேர் சேர்ந்து வேலை செய்தால் அவர்கள் தங்கள் வேலையிலிருந்து அதிகம் பெறலாம்.

12. ஒருவனாக இருப்பவனைப் பகைவன் எளிதில் தோற்கடித்து விடுவான். அவனால் இருவரைத் தோற்கடிப்பது கடினம். மூன்றுபேராக இருப்பது இன்னும் பலம். அவர்கள் மூன்று புரிகளை உடைய கயிறு அறுப்பதற்குக் கடினமாய் இருப்பதைப் போன்றவர்கள்.

தீர்மானிக்கும் நேரம்

நான் இன்று முதல் தவறான நண்பர்களை விட்டு விலகி இந்த குழுவுடனும், நல்ல குணம் உள்ள பிள்ளைகளுடனும் எனது நட்பைத் தொடருவேன்.

துதிக்க

1..

2..

ஜெபிக்க

1..

2..

இறுதி ஜெபம்

ஆண்டவரே! எங்களைச் சுற்றி நீர் தந்திருக்கிற நல்ல நண்பர்களுக்காக நன்றி கூறுகிறோம். தொடர்ந்து இந்த நண்பர்களுக்காக குழுவில் ஒருமைப்பாட்டையும், ஐக்கியத்தையும் காத்துக் கொள்ளும். இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். பிதாவே ஆமென்!

5. என் ஹீரோ எங்கே ?

முன்னுரை

இன்று உலகில் மனிதராய் வாழும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் தனக்கு முன்னோடியாக, மாதிரியாக, வழி நடத்தும் தலைவராக, தனக்குப் பிடித்த தலைவராக குறிப்பிட்ட ஒரு நபரை ஏற்றுக்கொள்கின்றனர். நாமும் கூட ஒரு ஹீரோவைத் தேர்ந்தெடுக்கும் வயதில் இருக்கிறோம். இங்கே 100 சதவீத முழுமைத் தகுதி, திறமையுள்ள இயேசுக் கிறிஸ்துவுக்கும், நம் முன்னால் ஹீரோக்களாக தெரியும் நபர்களுக்குமுள்ள வித்தியாசத்தை கீழே காண்போம்.

பாடல் :

என் உள்ளம் தேவன்பால்...

ஜெபம் :

அன்புள்ள ஆண்டவரே! நீரே எங்கள் நிலையான, நிரந்தரமான முன்மாதிரி என்பதைக் குறித்து தியானிக்க வந்திருக் கிறோம். உம்மைப்பற்றி நாங்கள் அறிந்து கொள்ள எங்களுக்கு உதவி புரியும். ஆமென்!

சிந்திக்கும் நேரம்

இயேசுவின் போதனை

மத்தேயு 5:39-48

கீழ்க்கண்டவற்றை சரியா? தவறா? என்று வட்டமிடுக!

1. தீமைக்கு தீமை செய்ய வேண்டும் - (வசனம் 39)

சரி/தவறு

2. உ ன் னை நே சி ப் ப வ ர் க ளை யே நே சி – (வசனம் 44)

சரி/தவறு

3. உன்னிடத்தில் கடன் கேட்கிறவர்களுக்கு முகம் கோணாமல் கொடு – (வசனம் 42)

சரி/தவறு

இயேசுவின் வாழ்க்கை

I புகழை விரும்பாதவர்

யோவான் 7:1-6

1. இயேசுவின் சகோதரர்கள் ஏன் யூதேயாவுக்கு போகும்படி கூறினார்கள்?(வசனம்4)

....
....
....

2. ஏன் இயேசு யூதேயாவுக்கு செல்லவில்லை?

....
....

II பாரபட்சம் காட்டாதவர்

மாற்கு 10:35-45

35. பிறகு செபெதேயுவின் மகன்களாகிய யாக்கோபும், யோவானும் இயேசுவிடம் வந்தார்கள். அவர்கள், "போதகரே நீங்கள் எங்களுக்காக ஏதேனும் செய்ய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்" என்றனர்.

36. அவர்களிடம் இயேசு, "நான் உங்களுக்காக என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்" எனக் கேட்டார்.

37. உங்கள் "இராஜ்ஜியத்தில் உங்களுக்கென்று மகிமை உள்ளது. எங்களில் ஒருவர் உங்கள் வலது பக்கத்திலும் இன்னும் ஒருவர் இடது பக்கத்திலும் இருக்க வாய்ப்புத் தரவேண்டும்" என்றனர்.

38. அதற்கு இயேசு, "நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என்பது உங்களுக்குப் புரியவில்லை. நான் ஏற்கப்போகும் பாடுகளை உங்களால் ஏற்றுக்கொள்ள முடியுமா? நான் ஞானஸ்நானம் பெறும் விதத்திலேயே நீங்களும் பெற்றுக்கொள்ள முடியுமா?" என்று கேட்டார்.

39. அவர்கள், "ஆமாம் எங்களால் முடியும்" என்றனர். இயேசு அவர்களிடம், "நான் படப்போகும் துன்பங்களை எல்லாம் நீங்களும் பட வேண்டியதிருக்கும். நான் பெறப்போகும் ஞானஸ்நானத்தை நீங்களும் பெற வேண்டியதிருக்கும்.

40. எனக்கு வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் இருக்கப்போகின்றவர்களை என்னால் தீர்மானித்திருக்க முடியாது. அந்த இடத்திற்காகச் சிலர் இருக்கின்றார்கள். அவர்களுக்காகவே அந்த இடங்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன" என்றார்.

41. ஏனைய பத்து சீடர்களும் இயேசு சொல்வதைக் கேட்டனர். அவர்களுக்கு யாக்கோபு மீதும், யோவான் மீதும் கோபம் ஏற்பட்டது.

42. இயேசு தன் சீடர்களை எல்லாம் தம்மிடம் அழைத்தார். அவர்களிடம், "யூதர் அல்லாத மக்கள் ஆள்வோர்கள் எனக் கருதப்படுகின்றனர். இந்த ஆள்வோர்கள் தம்

அதிகாரத்தை மக்கள்மீது செலுத்துவதையே பெரிதும் விரும்புகிறார்கள். அவர்களின் முக்கியத்தலைவர்கள் தம் அதிகாரத்தை மக்கள்மீது செலுத்துவதையே பெரிதும் விரும்புகிறார்கள், என்று நீங்கள் அறிவீர்கள்.

43. ஆனால், . நீங்கள் மேற்கொள்ளும்வழி இதுவாக இருக்கக்கூடாது. உங்களில் ஒருவன் பெரியவனாக விரும்பினால் அவன் ஒரு வேலைக்காரனைப்போல மற்றவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும்.

44. உங்களில் ஒருவன் மிகவும் முக்கியஸ்தனாக விரும்பினால் அவன் அடிமையைப்போல உங்கள் எல்லாருக்கும் சேவை செய்ய வேண்டும்.

45. இதுபோலவே, மனித குமாரன் பிறருடைய பணிவிடைகளைப் பெறுவதற்காக வரவில்லை. அவர் மற்றவர்களுக்குப் பணிவிடை செய்யவே வந்துள்ளார். அவர் பல மக்களைக் காப்பாற்றுவதற்காகத் தன் உயிரைத்தர வந்துள்ளார்" என்றார்.

3. இயேசு தமக்கு வேண்டியவர்கள் என்று பாரபட்சமாக நடந்து கொண்டாரா?

....

....

III எல்லாரையும் நேசிப்பவர்

யோவான் 13:1

இது ஏறக்குறைய பஸ்கா பண்டிகைக்கான நேரம். இதுதான் இந்த உலகத்தை விட்டுச் செல்வதற்கான நேரம் என்பதை இயேசு அறிந்திருந்தார். இயேசு, தன் பிதாவிடம் திரும்பிப் போவதற்கான காலம் இது. இயேசு அவருடைய மக்களின் மீது பெரிதான அன்பை எப்போதும் வைத்திருந்தார்.

4. தம்மைக் காட்டிக்கொடுக்கப்போகிற யூதாஸை இயேசு வெறுத்தாரா?

....

....

IV குற்றம் இல்லாதவர்

யோவான் 8:46

உங்களில் எவராவது ஒருவர் நான் பாவம் செய்தவன் என்று நிரூபிக்க இயலுமா? நான் சொல்வது உண்மையாக இருக்கும்போது என்னை ஏன் நம்பாமல் இருக்கிறீர்கள்?

மாற்கு 14:56

பலர் வந்து அவர்மீது தவறான குற்றச்சாட்டுகளை கூறிக்கொண்டிருந்தனர். ஆனால் அவை ஒன்றுக்கொன்று ஒத்துப்போகவில்லை.

மத்தேயு 27:24

மக்களை மாற்றத் தன்னால் ஏதும் செய்ய முடியாது என்பதை பிலாத்து கண்டான். மேலும் மக்கள் பொறுமையிழப்பதையும் பிலாத்து கவனித்தான். ஆகவே தண்ணீரை எடுத்து மக்கள் எல்லோரும் காணுமாறு தன் கைகளைக் கழுவினான். பின்பு, “இவரது மரணத்திற்கு நான் பொறுப்பல்ல. நீங்களே அதைச் செய்கிறீர்கள்” என்று பிலாத்து கூறினான்.

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியா? தவறா? என எழுது.

i. என்னிடத்தில் பாவம் இல்லை என்று எல்லாராலும் கூற முடியும்

சரி / தவறு

ii. இயேசு குற்றவாளி என பிலாத்து தீர்ப்பளித்தார்

சரி / தவறு

iii. அநேகர் இயேசுவுக்கு விரோதமாக பொய்சாட்சி சொல்லியும் ஒத்துப்போகவில்லை

சரி / தவறு

V மன்னிப்பவர்

லூக்கா 23:32-42

5. இயேசு தம்மை சிலுவையில் அறைந்த மக்களை பார்த்து என்ன சொன்னார்? (வசனம் 34)

....

....

சிந்தனைக்கு

குணங்கள்	இன்றைய எனது ஹீரோவிடம் உள்ளதா?	இயேசுவிடம் உள்ளதா?
தவறே செய்யாதவர்		
எல்லாரையும் நேசிப்பவர்		
எந்த தவறையும் மன்னிப்பவர்		
எனக்காக உயிரைத் தருபவர்		
என்னைப்போல் வாழ் என இவரால் கூறமுடியும்		

இன்று நீங்கள் விரும்பும் நபரை, இயேசுவை ஒப்பிட்டுப்பார்த்து ஆம் அல்லது இல்லை என பதில் எழுதுங்கள்.

மனப்பாட வசனம்

1 யோவான் 2 : 6

ஒரு மனிதன் தான் தேவனில் வாழ்வதாகக் கூறினால், அவன் இயேசு வாழ்ந்ததைப் போன்று வாழ வேண்டும்.

தீர்மானிக்கும் நேரம்

இயேசுவையே உங்கள் வாழ்நாள் முழுவதற்கும் நிரந்தரமான ஹீரோவாக ஏற்றுக்கொள்ள தீர்மானித்தால் கீழ்க்கண்ட தீர்மானத்தை எடுங்கள்.

தீர்மானம்

நான் என் பழைய ஹீரோக்களை இன்றோடு விட்டுவிட்டு இன்றுமுதல் இயேசுவையே என் நிரந்தர ஹீரோவாக தீர்மானிக்கிறேன்.

இறுதி ஜெபம்

ஆண்டவரே! இந்தப் பகுதியின் மூலம் உம்மை சிறந்த முன்மாதிரியாக காட்டியதற்காக நன்றி. நாங்கள் இன்று முதல் உம்மையே எங்கள் நிரந்தர ஹீரோவாக தீர்மானித்துள்ளோம். உமது வாழ்வில் காணப்பட்ட அன்பு, நேர்மை, மன்னிப்பு, புகழை விரும்பாத குணம், பாரபட்சமற்ற செயல் போன்றவைகள் போல் நானும் வாழ உதவிச் செய்யும். இயேசுவின் மூலம் பிதாவே, ஆமென்!

உங்களில் ஒருவன் மிகவும் முக்கியஸ்தனாக
விரும்பினால் அவன் அடிமையைப்போல உங்கள்
எல்லாருக்கும் சேவை செய்ய வேண்டும்.

மாற்கு 10:44

இதுபோலவே, மனித குமாரன் பிறருடைய
பணிவிடைகளைப் பெறுவதற்காக வரவில்லை.
அவர் மற்றவர்களுக்குப் பணிவிடை செய்யவே
வந்துள்ளார். அவர் பல மக்களைக்
காப்பாற்றுவதற்காகத் தன் உயிரைத்தர
வந்துள்ளார் என்றார்.

மாற்கு 10:45

6. இதோ மூளைக்கு வேலை

முன்னுரை

"சோம்பேறியின் மூளை சாத்தானின் ஆயுதக்கிடங்கு"

ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் இந்த உலகில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு வைத்துள்ளார். அதற்கென நாளொன்று 24 மணி நேரத்தையும் பரிசாக தந்துள்ளார். இந்த நேரத்தை சரியாக பயன்படுத்தியவர்களே வாழ்க்கையில் உயர்ந்துள்ளனர். நாம் நமக்கு கொடுக்கப்பட்ட ஒவ்வொரு மணித்துளியையும் இப்போது எப்படி பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே நமது எதிர்காலமும் அமைந்துள்ளது. இப்போது நாம் சரியாக பயன்படுத்தாவிடில் எதிர்காலத்தில் வருந்த வேண்டிய நிலை வரும்.

இந்த 24 மணி நேரத்தில் சாப்பிட, தூங்க, படிக்க, விளையாட, பொழுது போக்கு என பலவழிகளில் செலவழிக்கிறோம். இதை சரியாக திட்டமிட்டு நாம் செயல்படாவிடில் நமது மனதில் தீய எண்ணங்கள், தீய சிந்தனைகள் குடிகொள்ளும். பின்பு அது நம்மை தீய செயல்களைச் செய்ய வழி நடத்தும். எனவே 24 மணி நேரத்தில் 8 மணி நேரம் தூக்கத்திற்கு போக மீதி நேரத்தை திட்டமிட்டு செலவழிக்க வேண்டும்.

எப்பொழுதும் விளையாடிக் கொண்டிருப்பதும் சரியல்ல.

எப்பொழுதும் தூங்கிக்கொண்டிருப்பதும் சரியல்ல.

எப்பொழுதும் பொழுது போக்கிக் கொண்டிருப்பதும் சரியல்ல.

எப்பொழுதும் படித்துக் கொண்டிருப்பதும் சரியானதல்ல.

எனவே,

விளையாடும் நேரத்தில் விளையாடுங்கள்

தூங்கும் நேரத்தில் தூங்குங்கள்

படிக்கும் நேரத்தில் படியுங்கள்

மற்ற நேரத்தில் மூளைக்கு வேலை கொடுத்துக் கொண்டேயிருங்கள். நான் இன்றைய நாளில் எதையாவது ஒன்றைச் சாதிப்பேன். இந்த நேரத்தில் எனக்கும் மற்றவருக்கும் பிரயோஜனமானதை செய்வேன். இந்த நேரத்தில் எதையாவது புதிதான ஒன்றைப்பற்றி தெரிந்து கொள்வேன் என்ற எண்ணத்தோடு ஒவ்வொரு நாளும் துவக்குங்கள்.

பாடல் :

இராஜாதி இராஜா...

ஜெபம் :

அன்புள்ள ஆண்டவரே! இன்றைய தினம் நாங்கள் எங்களுக்குக் கொடுத்துள்ள வாய்ப்புகளை, திறமைகளை, நேரத்தை பயன்படுத்துவதைக் குறித்து தியானிக்க கூடியுள்ளோம். இதை எங்களுக்கு கற்றுத்தாரும். ஆமென்!

சிந்திக்கும் நேரம்

மத்தேயு 25:14-30

1. ஐந்து தாலந்து வாங்கினவனும் இரண்டு தாலந்தை வாங்கினவனும் என்ன செய்தார்கள்? (வசனம் 16, 17)

   ....

   ....

2. இந்த பகுதியிலிருந்து நம் ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் குறைந்தபட்சம் ஒரு திறமையாவது கொடுத்துள்ளார் என்பதை நம்புகிறீர்களா?

....

....

3. முதல் இரண்டு பேருக்கு கிடைத்த பலன் என்ன? (வசனம் 21, 23)

....

....

4. நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ள திறமைக்கு கணக்கொப்புவிக்க வேண்டும். சரியா? தவறா?

....

....

5. இதற்கு முன்னால் உங்களுக்கு கிடைத்த வாய்ப்பினை சரியாக பயன்படுத்தாமல் இருந்த மூன்று காரியங்களை எழுது?

அ..

ஆ..

இ..

செயல்படும் நேரம்

தற்போது உன்னிடம் உள்ள திறமைகளை கண்டுபிடிக்க முயற்சி செய். அதை எப்படி செயல் படுத்தப் போகிறோம் என்பதையும் தீர்மானி.

என்னிடம் உள்ள திறமைகள்	பிறருக்கு பயன்படும்படி நான் செய்ய விரும்பும் செயல்

மனப்பாட வசனம் நீதிமொழிகள் 22 : 29

ஒருவன் தனது வேலையில் திறமையுடையவனாக இருந்தால் அவன் அரசனிடம் பணியாற்றும் தகுதியைப் பெறுகிறான். அவன் முக்கியமில்லாதவர்களுக்குப் பணியாற்றும் தேவை இருக்காது.

தீர்மானம்

நான் இன்று முதல் எனக்கு கிடைத்துள்ள ஒவ்வொரு வாய்ப்புகளையும் சரியாக பயன்படுத்திக் கொள்வேன்.

இறுதி ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே! இந்த பகுதியிலிருந்து எங்கள் ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் ஒரு திறமை கொடுத்துள்ளதை நாங்கள் கண்டுகொண்டோம். நாங்கள் இன்று முதல் எங்களுக்கு கிடைத்துள்ள வாய்ப்புகளையும், திறமைகளையும், நேரத்தையும் பயன்படுத்த உதவி செய்யும். ஆமென்!

7. எனக்குப் பிறன் யார்?

முன்னுரை

இன்று உலகில் வாழும் மக்கள் ஒவ்வொருவருக்கும் அடுத்தவரைப் பற்றி சிந்திக்கக் கூட நேரமில்லாமல் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறார்கள். என் குடும்பம், என் பெற்றோர், என் உறவினர், நான், எனது என்ற சுய நலத்தோடு பெரும்பாலான மக்கள் இருக்கின்றனர். கிறிஸ்துவுக்குள் வளர விரும்புகிற நாம் இத்தகைய எண்ணத்தோடே இருக்கக்கூடாது. கிறிஸ்து கற்பித்த கட்டளைகளில் முக்கியமானவை உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக என்பது. இதற்கு நிகரான இரண்டாம் கட்டளை உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறனிடத்தில் அன்பு கூறுவாயாக என்பதே. ஆண்டவரிடத்தில் அன்பு வைத்து அவருக்குள் வளர்ந்து கொண்டிருக்கிற நாம் நமது சக மனிதர்களிடத்தில் அன்பு கூறவேண்டியது அவசியம்.

பாடல் :

இயேசு கிறிஸ்து மாறாதவரே...

ஜெபம் :

அன்புள்ள ஆண்டவரே! நாங்கள் இன்று ஒருவரோடு ஒருவர் அன்பாயிருப்பதைக் குறித்து கற்றுக் கொள்ள வந்திருக்கிறோம். உம்மைப்போல் அன்புள்ளவர்களாயிருக்க நீர் உதவிபுரியும். ஆமென்!

வேதபகுதி

லூக்கா 10:25-37

சிந்திக்கும் நேரம்

1. அன்பு கூறுதல் என்றால் என்ன?

    ....

    ....

2. காயம்பட்ட மனிதனுக்கு உதவி செய்ய வேண்டியது அவசியமா?

    ....

    ....

3. சமாரியன் ஏன் உதவி செய்தான்? (வசனம் 27)

    ....

    ....

4. உன் வாழ்க்கையில் ஆசாரியன், லேவியனைப் போல் நீ நடந்து கொண்ட சம்பவத்தைக் கூறு.

    ....

    ....

5. இனிமேல் நல்ல சமாரியனாக எந்தெந்த வழிகளில் செயல்பட உள்ளாய் என்பதை எழுது.

    1. ....

    2. ....

    3. ....

6. ஒரு மனிதனுக்கு நாம் செய்யும் மிகப்பெரிய உதவி எது?

    ....

    ....

வேதபகுதி

1 கொரி 13:1-7

1. நான் இப்போது மிகச்சிறந்த வழியைக் காட்டுவேன். மனிதர்களுடையதும், தேவதூதர்களுடையதுமான வெவ்வேறு மொழிகளை நான் பேசக்கூடும். ஆனால் என்னிடம் அன்பு இல்லையானால் நான் சப்தமிடும் மணியைப்போலவும், தாளமிடும் கருவியைப்போலவும் இருப்பேன்.

2. தீர்க்கதரிசனம் உரைக்கும் வரம் எனக்கு இருக்கலாம். தேவனுடைய இரகசியமான காரியங்களை நான் உணர்ந்துகொள்ளக்கூடும். எல்லாம் அறிந்திருக்கக்கூடும். மலைகளை அசைக்கவல்ல அரிய விசுவாசம் எனக்கு இருக்கக்கூடும். ஆனால் இவையிருந்தும் என்னிடம் அன்பு இல்லையானால் மேற்கண்ட செய்கைகளைச் செய்வதால் எனக்கு எவ்வித பயனுமில்லை.

3. மக்களுக்கு உணவுகொடுக்க என்னிடமிருக்கிற ஒவ்வொன்றையும் நான் கொடுக்கலாம். என் சரீரத்தையே கூட காணிக்கைப் பொருளாகக் கொடுக்கலாம். ஆனால் என்னிடம் அன்பு இல்லையென்றால் இக்காரியங்களைச் செய்வதின்மூலம் எனக்கு எவ்வித லாபமும் இல்லை.

4. அன்பு பொறுமை உள்ளது. தன்னைப் புகழாது, அன்பு தற்பெருமை பாராட்டாது. அன்பு பொறாமை அற்றது.

5. அன்பு கடுமையானதன்று. அன்பு தன்னலமற்றது. அன்பு எளிதாக கோபம் அடையாது. தனக்கு எதிராக இழைக்கப்படும் தீங்குகளையும் அன்பு நினைவுகொள்ளாது.

6. அன்பு தீமையைக் கண்டு மகிழ்வதில்லை. ஆனால் உண்மையைக் கண்டு மகிழ்கிறது.

7. அன்பு எல்லாவற்றையும் பொறுமையாய் ஏற்கும். அன்பு எப்போதும் நம்பும். அன்பு கைவிடுவதில்லை. எப்போதும் உறுதியுடன் தொடரும்.

(அன்பு என்று வரும் இடங்களில் உங்கள் பெயரைக் கூறி வாசிக்கவும்.)

மனப்பாட வசனம்

யோவான் 15:12

இதைத்தான் நான் (இயேசு) உங்களுக்கு கட்டளை இடுகிறேன். நான் உங்களை நேசிப்பது போல் நீங்களும் ஒருவரை ஒருவர் நேசியுங்கள்.

தீர்மானிக்கும் நேரம்

நான் இன்று முதல் என் வீட்டில், வகுப்பில், விளையாட்டு மைதானத்தில், போகும், வரும் இடங்களில் அன்புள்ளவனாக இருப்பேன்.

இறுதி ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே! நாங்கள் இன்று முதல் குழுவாக ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாக இருக்க உதவி புரியும். ஆமென்!

8. பொறுத்தது போதுமா?

முன்னுரை

நம்மில் பலர் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு சூழ்நிலைகளில் நமது பொறுமையை சோதிக்கும் சூழ்நிலை உள்ளது. எனது பெற்றோர் புரிந்து கொள்வதில்லை என்ற ஏக்கம் ஏற்படுகிறது. அரசியல்வாதிகள், ஜாதியின் பெயரால் உள்ள சங்கங்கள், நடிகர்களின் ரசிகர் மன்றங்களின் தலைவர்கள் போன்றோர் நம்மிடம் உள்ள துடிப்பை பயன்படுத்தி சுய நோக்கோடு பொறுத்தது போதுமா? பொங்கி எழ வேண்டாமா? என்று ஆவேசமாய் பேசி நம்மைத் தூண்டுவதைக் காண்கிறோம். நமக்கும்கூட நமது பொறுமைக்கும் எல்லை வேண்டாமா? "பொறுத்தவர் பூமி ஆண்டார், பொங்கினவர் போய் மாண்டார்" என்ற ஒரு பழமொழி வீண் பேச்சாகவே தென்படுகிறது. இது குறித்து நாம் முடிவாக ஆராய்வோம்.

பாடல் :

ஓ தேவனுக்கு மகிமை...

ஜெபம் :

அன்பின் ஆண்டவரே! கடந்த வாரங்களில் நீர் எங்களுக்கு கற்றுத் தந்த பாடங்களுக்காய் நன்றி. இன்றைய நாளில் பொறுமையோடு இருப்பது குறித்து நாங்கள் தியானிக்க வந்துள்ளோம். நாங்கள் பொறுமையோடு இருக்க உதவி புரியும். ஆமென்!

சிந்திக்கும் நேரம்

ஆதியாகமம் 45:1-11,15,22-24.

1. யோசேப்பு அதிக நேரம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அங்கிருந்தவர்களின் முன்னால் அவன் உள்ளம் உடைந்து கண்ணீர் சிந்தினான். யோசேப்பு "எல்லோரையும் வெளியே போகச் சொல்" என்று கட்டளையிட்டான். அனைவரும் வெளியேறினர். அச்சகோதரர்கள் மட்டுமே அங்கிருந்தார்கள். பிறகு அவன் தன்னை யாரென்று சொன்னான்.

2. யோசேப்பு தொடர்ந்து அழுதான். அந்த வீட்டில் உள்ள எகிப்தியர்கள் அனைவரும் அதைக் கேட்டனர்.

3. யோசேப்பு தனது சகோதரர்களிடம், "நான் உங்களின் சகோதரன் யோசேப்பு. என் தந்தை உயிரோடு நலமாக இருக்கிறாரா?" என்று கேட்டான். சகோதரர்கள் அவனுக்குப் பதில் சொல்லவில்லை. அவர்கள் குழப்பமும் பயமும் கொண்டனர்.

4. யோசேப்பு மீண்டும், "என்னருகே வாருங்கள். கெஞ்சிக் கேட்கிறேன், வாருங்கள்" என்றான். சகோதரர்கள் அவனருகே வந்தனர். அவர்களிடம், "நான் உங்கள் சகோதரன் யோசேப்பு. எகிப்திய வியாபாரிகளிடம் உங்களால் விற்கப்பட்டவன்.

5. இப்போது அதற்காக வருத்தப்படாதீர்கள். நீங்கள் செய்தவற்றுக்காக உங்களையே கோபித்துக் கொள்ளாதீர்கள். இங்கே நான் வரவேண்டும் என்பது தேவனின் திட்டம். உங்கள் வாழ்க்கையை காப்பாற்றவே இங்கே இருக்கிறேன்.

6. இந்தப் பஞ்சம் இரண்டு ஆண்டுகளாக இருக்கின்றன. இன்னும் ஐந்து ஆண்டுகள் இருக்கும்.

7. ஆகவே தேவன் என்னை உங்களுக்கு முன்னதாக அனுப்பி இருக்கிறார். அதனால் உங்களை காப்பாற்றமுடியும்.

8. என்னை இங்கே அனுப்பியது உங்கள் தவறு அல்ல. இது தேவனின் திட்டம். பார்வோன் மன்னருக்கே தந்தை போன்று நான் இங்கே இருக்கிறேன். நான் அரண்மனைக்கும், இந்த நாட்டிற்கும் ஆளுநராக இருக்கிறேன்" என்றான்.

9. யோசேப்பு அவர்களிடம், "வேகமாக என் தந்தையிடம் போங்கள். அவரது மகன் யோசேப்பு இந்தச் செய்தியை அனுப்பியதாக கூறுங்கள்: தேவன் என்னை எகிப்தின் ஆளுநராக ஆக்கினார். எனவே என்னிடம் வாருங்கள். காத்திருக்க வேண்டாம். இப்போதே வாருங்கள்.

10. என்னருகில் கோசேன் நிலப்பகுதியில் வாழலாம். நீங்களும், உங்கள் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும், மிருகங்களும் இங்கே வரவேற்கப்படுகிறீர்கள்.

11. இனிவரும் ஐந்தாண்டு பஞ்சத்திலும் உங்கள் அனைவரையும் பாதுகாத்துக் கொள்வேன். எனவே நீங்களும், உங்கள் குடும்பமும் உங்களுக்குரிய எதையும் இழக்க மாட்டீர்கள் என்று கூறுங்கள்" என்றான்.

15. பிறகு அவன் சகோதரர்கள் அனைவரையும் முத்தமிட்டான். அவர்களுக்காக அழுதான். இதற்குப்பிறகு அவர்கள் அவனோடு பேசத் தொடங்கினார்கள்.

22. சகோதரர் அனைவருக்கும் யோசேப்பு அழகான ஆடைகளைக் கொடுத்தான். ஆனால் யோசேப்பு பென்யமீனுக்கு மட்டும் ஐந்து ஜோடி ஆடைகளையும், 300 வெள்ளிக் காசுகளையும் கொடுத்தான்.

23. யோசேப்பு தன் தந்தைக்கும் அன்பளிப்புகளைக் கொடுத்து அனுப்பினான். 10 கழுதைகள் சுமக்குமளவு

எகிப்திலுள்ள சிறந்த பொருட்களையெல்லாம் கொடுத்தான். 10 பெண் கழுதைகள் சுமக்கும்படி உணவுப் பொருட்களும், ரொட்டியும், பிறபொருட்களும் தன் தந்தையார் திரும்பி வரும் பயணத்திற்குப் பயன்பட கொடுத்தான்.

24. பிறகு சகோதரர்களை அனுப்பினான். அவர்கள் பிரிந்துபோகும் போது “நேராக வீட்டிற்குப் போங்கள், வழியில் சண்டை போடாதீர்கள் என்றான்.”

1. யோசேப்பு தன்னை எகிப்துக்கு போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்ட தன் சகோதரர்களைப் பார்த்து என்ன கூறினான்?(வசனம் 5)

....

....

2. தனக்கு தீங்கு செய்த தன்னுடைய சகோதரர்களை பழிவாங்க சமயம் வாய்த்த போதும் யோசேப்பு அதைச் செய்தானா?

....

....

3. தனக்கு தீமை செய்த சகோதரர்களுக்கு யோசேப்பு என்ன நன்மை செய்தான்? (வசனம்22,23)

....

....

4. நீங்கள் யோசேப்பின் இடத்தில் இருந்தால் என்ன செய்வீர்கள்?

....

....

5. **கீழ்க்கண்ட புதிய ஏற்பாட்டு பகுதியிலிருந்து பொறுமை ஏன் அவசியம் என்பதைக் கீழே எழுதுங்கள்.**

லூக்கா 21:19

இக்காரியங்கள் மூலமாக உங்கள் நம்பிக்கையைப் பலப்டுத்துவதால் நீங்கள் உங்களை மீட்டுக்கொள்ளமுடியும்.

எபிரேயர் 12:1-14

1. நம்மைச் சுற்றிலும் விசுவாசமுடையவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். விசுவாசம் என்றால் என்ன பொருள் என்று அவர்களது வாழ்க்கை நமக்குக் கூறுகின்றது. நாம் அவர்களைப் போல வாழவேண்டும். நாம் நடக்கும் பந்தயத்தில் நாம் பங்கெடுத்து ஓடவேண்டும். நம்முயற்சியில் இருந்து நாம் என்றும் பின்வாங்கக் கூடாது. நம்மைத் தடுத்து நிறுத்துகிற எதையும் நமது வாழ்விலிருந்து தூக்கி எறிய வேண்டும். நம்மைப் பற்றுகிற பாவங்களையும் விலக்கிவிட வேண்டும்.

2. நாம் இயேசுவை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்ற வேண்டும். நம் விசுவாசத்தின் தலைவரே இயேசுதான். நமது விசுவாசத்தை அவர் முழுமையாக்குகிறார். அவர் சிலுவையில் துன்புற்று மரணம் அடைந்தார். ஆனால் சிலுவையின் அவமானத்தை பொருட்படுத்தாமல் சிலுவையின் துன்பங்களை அவர் ஏற்றுக்கொண்டார். தேவன் அவருக்கு முன்னால் வைக்கப்போகிற மகிழ்ச்சிக்காகவே இத்தனையையும் ஏற்றுக் கொண்டார். எனவே இப்போது அவர் தேவனுடைய வலது புறத்தில் வீற்றிருக்கிறார்.

3. இயேசுவைப் பற்றி நினைத்துப்பாருங்கள். பாவிகள் அவருக்கு எதிராகச் செயல்புரிந்துபோது அவர் அதனைப் பொறுமையாக ஏற்றுக் கொண்டார். இயேசு செய்தது போலவே நீங்களும் பொறுமையோடு சோர்ந்து போகாமல் இருங்கள்.

4. நீங்கள் பாவத்துக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் உங்கள் போராட்டம் இன்னும் நீங்கள் கொல்லப்படுகிற அளவுக்கு வன்மையாகவில்லை.

5. நீங்கள் தேவனுடைய பிள்ளைகள். அவர் உங்கள் ஆறுதலுக்காகவே பேசுகிறார். நீங்கள் அந்த வார்த்தைகளை மறந்து விட்டீர்கள். ''என் மகனே! கர்த்தர் உன்னைத் தண்டிக்கும்போது அதனை அற்பமாக எண்ணாதே. அவர் உன்னைத் திருத்தும்போது உன் முயற்சியைக் கைவிட்டு விடாதே.

6. தம் நேசத்துக்குரிய ஒவ்வொருவரையும் கர்த்தர் தண்டிக்கிறார். தம் மக்களாக ஏற்றுக்கொள்கின்ற எல்லோரையும் தண்டித்துக்திருத்துகிறார்''.

7. எனவே ஒரு பிதாவின் தண்டனை என்று எல்லாத் துன்பங்களையும் ஏற்றுக்கொள்ளுங்கள். ஒரு தந்தை தன் மகனைத் தண்டிப்பது போன்றே தேவன் உன்னையும் தண்டித்திருக்கிறார். எல்லாப் பிள்ளைகளுமே தம் தந்தைகளால் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

8. நீங்கள் எந்த நாளிலும் தண்டிக்கப்படாவிட்டால் உண்மையில் தேவனுடைய பிள்ளைகள் ஆகவில்லை என்று பொருள்.

9. இங்கே பூமியில் தண்டிக்கிற தந்தைகளையே நாம் கொண்டிருக்கிறோம். அதற்காக அவர்களை நாம் மதிக்கிறோம். ஆகவே நம் ஆன்மீகத் தந்தைக்கு மிக அதிகமாக அடங்கி நடக்க வேண்டும். நாம் இதனைச் செய்தால் நமக்கு வாழ்வு உண்டு.

10. உலகில் உள்ள தந்தைகளின் தண்டனை கொஞ்சகாலத்திற்குரியது. அவர்கள் தங்களின் சிந்தனைக்குச் சரியாகத் தோன்றுகிறதையே செய்கிறார்கள். ஆனால் தேவன் நமக்கு உதவி செய்வதற்காகவே தண்டிக்கிறார். எனவே நாம் அவரைப் போன்று பரிசுத்தமாகலாம்.

11. எந்தத் தண்டனையும் அந்நேரத்தில் மகிழ்ச்சிக்குரியதாக இருப்பதில்லை! ஆனால், பிறகு அதில் பழகியவர்கள்,

நேர்மையான வாழ்விலிருந்து வருகிற சமாதானத்தை அனுபவிப்பார்கள்.

12. நீங்கள் பலவீனமாகிவிட்டீர்கள். மீண்டும் உங்களைப் பலப்படுத்திக்கொள்ளுங்கள்.

யாக்கோபு 1 : 4

நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொறுமை வெளிப்படக்கடவது. அப்பொறுமை உங்களை, நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாக இல்லாமல் முழுமையும் நிறைவும் உள்ளவர்களாக ஆக்கி தன் பணியை நிறைவு செய்யும்.

எபிரேயர் 6 : 11-15

11. நீங்கள் நம்பிக் கொண்டிருக்கிற இரட்சிப்பை அடையும் பொருட்டு உங்கள் வாழ்க்கை முழுதும் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதே எங்கள் விருப்பம் ஆகும்.

12. நீங்கள் சோம்பேறியாவதை நாங்கள் விரும்பவில்லை. தேவனால் வாக்குறுதி அளிக்கப்பட்டதைப் பெறப்போகிற மக்களைப் போன்று நீங்கள் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். அவர்களிடம் பொறுமையும் விடாமுயற்சியும் இருப்பதால் அவர்கள் தேவனுடைய வாக்குறுதியைப் பெறுவார்கள்.

13. தேவன் ஆபிரகாமிடம் ஒரு ஆணையிட்டார். மேலும் ஆணையிட்டுச் சொல்ல தேவனைவிட மிகப் பெரியவர் யாரும் இல்லாததால்.

14. "நான் உண்மையாகவே உன்னை ஆசீர்வதிக்கிறேன். நான் உனக்கு ஏராளமான சந்ததிகளைக் கொடுப்பேன்" என்று தன் பெயரிலேயே ஆணையிட்டுச் சொன்னார்.

15. இது நிகழும் வரை ஆபிரகாம் பொறுமையாகக் காத்திருந்தான். இறுதியில் அவன் தேவனுடைய வாக்குறுதியின்படியே பெற்றுக் கொண்டான்,

கலாத்தியர் 5:22

ஆனால், ஆவியானவர் நமக்கு அன்பு, மகிழ்ச்சி, சமாதானம், பொறுமை, கருணை, நன்மை, விசுவாசம், நற்பண்பு, தன்னடக்கம், ஆகிய நற்கனிகளை உருவாக்குகின்றார்.

அ ....

ஆ..

இ. ....

ஈ..

மனப்பாட வசனம்

ரோமர் 8 : 28

தன்னை நேசிக்கும் மக்களுக்கு தேவன் எல்லாவற்றின் மூலமும் நன்மை செய்கிறார் என்பதை நாம் அறிகிறோம். தேவன் இம்மக்களைத் தம் திட்டப்படியே தேர்ந்தெடுத்துள்ளார்.

தீர்மானிக்கும் நேரம்

ஆண்டவரே! நான் இன்று முதல் என் வாழ்க்கையில் நடக்கும் அனைத்துச் செயல்களும் எனது நன்மைக்கே நடக்கிறதென்று எல்லாவற்றிலும் பொறுமையோடு நடந்து கொள்ளுவேன்.

இறுதி ஜெபம்

ஆண்டவரே! இன்று எங்களுக்கு யோசேப்பின் வாழ்க்கையிலிருந்து பொறுமையாயிருக்க கற்றுத் தந்தபடியால் நன்றி. நாங்கள் இன்று முதல் பொறுமையுள்ளவர்களாக மாற உதவி புரியும். ஆமென்.

9. இன்பமா? இழப்பா?

முன்னுரை

"வாழ்க்கை அனுபவிப்பதற்கே
களவும் கற்றுமற"

எப்போதாவது கேட்டதுண்டா?

நாம் வாழும் நாட்களுக்குள் எல்லாவற்றையும் அனுபவித்து விட வேண்டும் என்று கூறுவதைக் கேட்டிருக்கிறீர்களா? நம்முடன் பழகும் நண்பர்கள், உறவினர்கள் பரவாயில்லை இன்று ஒரு நாள் தானே இனிமேல் செய்யமாட்டோம் என்று கூறி தவறான பாதைக்கு அழைத்துச் செல்லலாம். ஆனால் வாழ்க்கையின் நோக்கத்தை இழந்து தவிக்கும் நம் போன்ற சிறுவர்களின் கடந்த காலத்தைப் பார்த்தால் இதைப் போல ஒத்த ஒரு சூழ்நிலையில் விட்டுக் கொடுத்தவர்கள் சிக்கிய பின்பு மீளமுடியாதவர்கள். விட்டுவிட நினைத்தாலும் விடுபட முடியாதவர்கள்.

பாடல் :

அவர் சமூகம் என் சந்தோஷமே...

ஜெபம் :

குழுவில் உள்ள யாராவது ஒருவர் இன்றைய நாளின் கலந்துரையாடலுக்காக ஜெபிக்கலாம்.

சிந்திக்கும் நேரம்

வேதபகுதி லூக்கா 15:11-32

1. இளையகுமாரன் ஏன் தகப்பனைவிட்டு பிரிந்து சென்றான்? (வசனம் 13)

....

....

....

....

....

2. இளையகுமாரனுக்கு பிரிந்து சென்ற பின் என்ன நேர்ந்தது? (வசனம் 16)

....

....

3. தகப்பனை விட்டு பிரிந்து செல்லாமல் இருந்திருந்தால் எப்படி இருந்திருப்பான்?

....

....

4. இளைய குமாரனைப் போல தவறானதை அனுபவிக்கவேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு எப்போதாவது வந்ததா?

....

....

5. மேற்க்கண்டவற்றை செய்திருந்தால் இப்போது நீங்கள் எப்படி இருப்பீர்கள்?

....

....

இன்னொரு பழைய ஏற்பாட்டுப் பகுதியை நாம் பார்க்கலாமா?

பிரசங்கி 2:1-11

1. நான் எனக்குள்: "நான் வேடிக்கை செய்வேன். என்னால் முடிந்தவரை எல்லாவற்றிலும் மகிழ்ச்சி அடைவேன்" என்று சொன்னேன். ஆனால் நான் இவையும் பயனற்றவை என்று கற்றுக் கொண்டேன்.

2. எல்லா நேரத்திலும் சிரித்துக் கொண்டிருப்பது முட்டாள்தனமானது. கேளிக்கையை அனுபவிப்பது எந்த நன்மையையும் செய்யாது.

3. எனவே என் மனதை ஞானத்தால் நிரப்பும்போது என் உடலை திராட்சை ரசத்தால் நிரப்ப முடிவு செய்தேன். இந்த முட்டாள்தனத்தை நான் முயற்சி செய்தேன். ஏனென்றால் நான் மகிழ்ச்சியடைவதற்குரிய வழியை கண்டுபிடிக்க எண்ணினேன். ஜனங்களின் குறுகிய வாழ்வில் அவர்கள் என்ன நன்மை செய்யக்கூடும் என்று பார்க்க விரும்பினேன்.

4. பிறகு நான் பெரிய செயல்களைச் செய்யத் துவங்கினேன். வீடுகளைக் கட்டினேன். திராட்சைத் தோட்டங்களை எனக்காக நட்டேன்.

5. நான் தோட்டங்களை அமைத்தேன். பூங்காவனங்களை உருவாக்கினேன். எல்லா வகையான பழமரங்களையும் நட்டேன்.

6. நான் எனக்காக குளங்களை அமைத்தேன். அதன்மூலம் பழமரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சினேன்.

7. நான் ஆண்களையும், பெண்களையும் அடிமைகளாக வாங்கினேன். என் வீட்டிலும் அடிமைகள் பிறந்தனர். பல பெருஞ்செல்வங்கள் எனக்கு சொந்தமாயின. எனக்கு

மாட்டு மந்தையும், ஆட்டு மந்தையும் இருந்தன. எருசலேமில் மற்றவர்களைவிட எனக்கு ஏராளமான செல்வங்கள் இருந்தன.

8. நான் எனக்காகப் பொன்னையும், வெள்ளியையும் சேகரித்தேன். அரசர்களிடமிருந்தும், அவர்களின் நாடுகளிலிருந்தும் பொக்கிஷங்களை எடுத்துக் கொண்டேன். எனக்காகப் பாடிட ஆண்களும் பெண்களும் இருந்தனர். எவரும் விரும்பத்தக்க அனைத்துப் பொருட்களும் என்னிடம் இருந்தன.

9. நான் செல்வந்தனாகவும், புகழுடையவனாகவும் ஆனேன். எனக்கு முன் எருசலேமில் வாழ்ந்த எந்த மனிதரையும் விட நான் பெரிய ஆளாக இருந்தேன். எப்பொழுதும் எனது ஞானம் எனக்கு உதவுவதாக இருந்தது.

10. என் கண்கள் பார்த்து நான் விரும்பியதை எல்லாம் பெற்றேன். நான் செய்தவற்றிலெல்லாம் மனநிறைவு பெற்றேன். என் இதயம் பூரித்தது. இம்மகிழ்ச்சியே எனது அனைத்து கடின உழைப்பிற்கும் கிடைத்த வெகுமதி.

11. ஆனால் பின்னர் நான் செய்த அனைத்தையும் கவனித்தேன். நான் செய்த கடின உழைப்பை எல்லாம் நினைத்துப் பார்த்தேன். அவை அனைத்தும் காலவிரயம் என்று முடிவு செய்தேன். இது காற்றைப் பிடிப்பது போன்றது. நம் வாழ்க்கையில் நாம் செய்த அனைத்திலிருந்தும் இலாபகரமானது எதுவுமில்லை.

1. பிரசங்கிக்கு என்னவெல்லாம் இருந்தது? (வசனம் 4-10)

அ...

ஆ...

இ...

ஈ...

உ. ....

ஊ. ....

எ. ....

ஏ. ....

2. பிரசங்கி தான் அனுபவித்தவைகளில் திருப்தி அடைந்தாரா? (வசனம் 11)

அ. ....

ஆ. ....

3. பிரசங்கி எவையெல்லாம் மாயை (ஒன்றுமில்லை நிலையற்றது) எனக் கூறுகிறார்?

....

....

....

நீதிமொழிகள் 23:21

மிகுதியாக உண்பவனும், குடிப்பவனும் ஏழையாகி விடுகிறான். அவர்கள் செய்பவைகளெல்லாம் உண்பது, குடிப்பது மற்றும் தூங்குவது மட்டுமே. விரைவில் அவர்கள் ஒன்றும் இல்லாமல் போகிறார்கள்.

நீதிமொழிகள் 14:11

தீயவனின் வீடு அழிக்கப்படும். நல்லவனின் வீடு என்றும் வாழும்.

நீதிமொழிகள் 1:19

பேராசை உடையவர்கள் எப்பொழுதும் அதனாலேயே அழிந்து போவார்கள்.

நீதிமொழிகள் 21:17

வேடிக்கை செய்வதையே முதன்மையாகக் கருதுபவன் ஏழ்மையடைவான். அவன் திராட்சை ரசத்தையும், உணவையும் விரும்பினால் அவனால் செல்வந்தனாக முடியாது.

நீதிமொழிகள் 23:29

நிறைய மது குடிப்பவர்களுக்கு அநேகத் தீங்கு உண்டாகிறது. தங்களுக்குள் அடித்துக் கொண்டு சண்டைகளும், விவாதங்களும் செய்வார்கள். அவர்களின் கண்கள் சிவக்கின்றன.

கீழ்க்கண்ட நபர்களின் செயல்களையும் அவர்களுக்கு வரும் பலனையும் பொருத்துக.

(அ)	(ஆ)
1. திரு. துன்மார்க்கப்பிரியன்	தரித்திரம்
2. திரு. பொருளாசைக்காரன்	கந்தை
3. திரு. சிற்றின்பபிரியன்	வேதனை, துக்கம், சண்டை, காரணம், காரணமில்லாத காரியங்கள்
4. திரு. மதுபானப்பிரியன்	தன் உயிரையே வாங்கும்
5. திரு. தூக்கப்பிரியன்	வீடு அழியும்.

மனப்பாட வசனம்

இளைஞர்களே! இளமையாய் இருக்கும்போதே மகிழ்ச்சியாய் இருங்கள். அனுபவியுங்கள். உங்கள் மனம்போனபடி இருங்கள். நீங்கள் விரும்புகிறவற்றை செய்யுங்கள். ஆனால் உங்கள் செயல்களையெல்லாம் தேவன் நியாயந்தீர்ப்பார் என்பதை மறந்து விடாதீர்கள். (பிரசங்கி 11 : 9)

தீர்மானிக்கும் நேரம்

ஆண்டவர் உங்களோடு பேசியிருந்தால் இதுவரை செய்து வந்த மறைவான காரியங்களை விட்டு விலகுவதாக தீர்மானியுங்கள்.

ஆண்டவரே! நான் இன்று முதல் நிலையற்ற பணம், புகழ், தவறான இன்பம் போன்றவற்றில் என் மனதை செலுத்த மாட்டேன்.

துதிக்க

1. ....
2. ....
3. ....
4. ....
5. ....
6. ....

ஜெபிக்க

1. ....
2. ....
3. ....
4. ....
5. ....
6. ....

இறுதி ஜெபம்

ஆண்டவரே! இங்கு எங்கள் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் பேசியிருப்பதற்காக நன்றி. எங்களுடைய வாழ்க்கையில் இன்று முதல் நாங்கள் உம்மைப்பிரியப்படுத்தி வாழவும், உம்மால் வரும் சந்தோஷத்தை அனுபவிக்கவும் உதவிபுரியும். இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். பிதாவே ஆமென்!

10. என்ன தான் செய்வது ?

முன்னுரை

(குழுத்தலைவர் முன்னுரை வாசிக்க கேட்கலாம்)

காயா? பழமா? என்ற இப்புத்தகத்தின் கடைசி பாடத்தை படிக்க வந்துள்ள உங்களை மனதார பாராட்டுகிறோம். உங்களின் குணங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்காக ஆண்டவருக்கும், உங்களுக்கும் நன்றி கூறுகிறேன். கடைசியாக என்னதான் செய்வது? என்று உங்கள் மனதில் தோன்றக்கூடும். இன்னும் நீங்கள் செய்ய வேண்டிய ஒன்று உண்டு.

உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள். சந்தை வெளிகளில், பேருந்து நிலையத்தில், தெருக்களில் உங்களைப் போல படிக்க வாய்ப்பில்லாத அநேக சிறுவர்கள் உண்டு.

உங்களைப்போல சாப்பிட உணவில்லாத அநேகர் உண்டு.

கண்பார்வை அற்ற அநேகர் உண்டு.

எனவே படிப்பில் சிறந்த நீங்கள் படிக்க முடியாதவர்களுக்கு உதவுங்கள்.

உணவில்லாதவருக்கு உணவைப் பகிர்ந்து கொடுங்கள்

கண் இழந்தோருக்கு கண்ணாக இருங்கள்.

கால் இழந்தோருக்கு காலாக இருங்கள்.

பேச முடியாதவர்களுக்கு பேச்சாக ஆகுங்கள்.

பேதைகளுக்கு வழிகாட்டியாக இருங்கள்.

என்னவெல்லாம் நன்மை செய்ய முடியுமோ அதைச் செய்யுங்கள். உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்.

பாடல் :

நான் இயேசுவை நேசிக்கிறேன்...

ஜெபம் :

அன்புள்ள ஆண்டவரே! இன்றைய நாளில் எங்களால் முடிந்ததை மற்றவர்களுக்கு செய்வதைக் குறித்து தியானிக்க வந்துள்ளோம். உம்மைப் போல் நன்மை செய்கிறவர்களாக எங்களை மாற்றும். இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். பிதாவே ஆமென்!

சிந்திக்கும் நேரம்

வேதபகுதி

மத்தேயு 25:32-46.

32. உலகின் எல்லா மக்களும் மனித குமாரன் முன்னிலையில் ஒன்று திரள்வார்கள். மனித குமாரன் அவர்களை இரண்டு குழுக்களாகப் பிரிப்பார். ஓர் ஆட்டிடையன் தன் ஆடுகளை வெள்ளாடுகள், செம்மறியாடுகள் என பிரிப்பதைப் போல அவர் பிரிப்பார்.

33. மனித குமாரன் செம்மறியாடுகளை (நல்லவர்களை) வலது பக்கமும், வெள்ளாடுகளை (தீயவர்களை) இடது பக்கமும் நிறுத்துவார்.

34. "பின் அரசனானவர் தன் வலது பக்கமுள்ள நல்லவர்களிடம், 'வாருங்கள் என் பிதா உங்களுக்குப் பெரும் ஆசீர்வாதத்தை வழங்கியுள்ளார். உங்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள தேவனுடைய இராஜ்யத்தை அடையுங்கள். உலகம் தோன்றியது முதலே அந்த இராஜ்யம் உங்களுக்காகத் தயாராக உள்ளது.

35. நீங்கள் அந்த இராஜ்யத்தை அடையலாம். ஏனென்றால் நான் பசித்திருந்தபொழுது நீங்கள் எனக்கு உணவளித்தீர்கள். எனக்குத் தாகமேற்பட்டபோது தண்ணீர் கொடுத்தீர்கள். நான் வீட்டிலிருந்து தூரமாய் தனித்திருந்தபோது, என்னை உங்கள் வீட்டிற்கு அழைத்தீர்கள்.

36. நான் ஆடையின்றி இருந்தபோது நீங்கள் உடுக்க ஆடை அளித்தீர்கள். நான் நோயுற்றபோது என்னைக் கவனித்துக் கொண்டீர்கள். நான் சிறைப்பட்டபோது நீங்கள் என்னைக் காண வந்தீர்கள்' என்று சொன்னார்.

37. "அதற்கு நல்லவர்கள் பதில் சொல்வார்கள் 'ஆண்டவரே, எப்பொழுது நீர் பசித்திருக்கிறதைக் கண்டு நாங்கள் உமக்கு உணவளித்தோம்? எப்பொழுது உங்களுக்குத் தாகமேற்பட்டு நாங்கள் தண்ணீர் தந்தோம்?

38. எப்பொழுது நீர் வீட்டைவிட்டு வெளியேறி தனித்திருக்கிறதைக் கண்டு நாங்கள் உம்மை எங்கள் வீட்டிற்கழைத்தோம்? எப்போது நீர் ஆடையின்றி இருக்கக்கண்டு நாங்கள் உம்மை உடுத்துக் கொள்ள ஏதேனும் கொடுத்தோம்?

39. எப்பொழுது நாங்கள் உம்மை நோயுற்றோ, சிறையிலோ இருக்கக்கண்டோம்?' என்பார்கள்.

40. "பின்னர் மன்னவர், 'உங்களுக்கு உண்மையைக் கூறுகிறேன். இங்குள்ள என் மக்களில் மிகவும் சாதாரணமான யாருக்கேனும் நீங்கள் ஒன்றைச் செய்திருந்தால் நீங்கள் அதை எனக்கே செய்ததாகும்' என்று கூறினார்.

41. "பின் அரசர் தன் இடது பக்கமுள்ள தீயவர்களைப் பார்த்து, 'என்னை விட்டு விலகுங்கள். நீங்கள் தண்டிக்கப்பட வேண்டுமென தேவன் ஏற்கனவே

தீர்மானித்து விட்டார். என்றென்றும் எரிகிற அக்கினியிலே விழுங்கள். பிசாசுக்காகவும், அவனது தூதர்களுக்காகவும் ஆயத்தமாக்கப்பட்டது. அந்த அக்கினி.

42. நீங்கள் அதிலே சேர வேண்டும். ஏனென்றால் நான் பசித்திருந்தபொழுது நீங்கள் புசிக்க எதுவும் தரவில்லை. நான் தாகமாயிருந்தபொழுது, நீங்கள் குடிக்க எதுவும் கொடுக்கவில்லை.

43. நான் வீட்டிலிருந்து தூரமாய் தனித்திருந்த பொழுது, நீங்கள் என்னை உங்கள் வீட்டிற்கழைக்கவில்லை. நான் ஆடையின்றி இருந்தபொழுது, நீங்கள் உடுக்க துணியேதும் தரவில்லை. நான் நோயுற்றபொழுதும், சிறையிருந்தபொழுதும் நீங்கள் என்னைக் கவனித்துக் கொள்ளவில்லை' என்று கூறுவார்.

44. 'அதற்கு அத்தீயவர்கள், 'ஆண்டவரே! எப்பொழுது நீர் பசித்தும் தாகத்துடனுமிருந்ததை நாங்கள் கண்டோம்? எப்பொழுது நீர் வீட்டிலிருந்து தூரமாய் தனித்திருந்ததைக் கண்டோம்? அல்லது எப்பொழுது உம்மை ஆடையின்றியோ, நோயுற்றோ அல்லது சிறைபட்டோ கண்டோம்? எப்பொழுது இவைகளெல்லாம் கண்டு உமக்கு உதவாமல் போனோம்? என்பார்கள்.

45. அப்போது அரசர், "நான் உண்மையைச் சொல்லுகிறேன், இங்குள்ளவர்களில் சாதாரணமான யாருக்கேனும் எதையேனும் செய்ய நீங்கள் மறுத்தால், நீங்கள் எனக்கு மறுத்ததற்கு சமமாகும்!' என்பார்.

46. பிறகு அத்தீயவர்கள் விலகிச் செல்வார்கள். அவர்களுக்கு நித்தியமான தண்டனை கிடைக்கும். ஆனால் நல்லவர்களுக்கு நித்திய ஜீவன் கிடைக்கும்."

மேலே கொடுக்கப்பட்டுள்ள வசனத்திலிருந்து செம்மறி ஆடுகளுக்கும் (வலது பக்கத்தில் நிற்பவர்களுக்கும்) வெள்ளாடுகள் (இடது பக்கத்தில் நிற்பவர்களுக்கும்) உள்ள வேறுபாட்டை பிரித்தெழுது.

வெள்ளாடு (இடது பக்கம்)	செம்மறி ஆடு (வலது பக்கம்)
1.	1.
2.	2.
3.	3.
4.	4.
5.	5.
6.	6.
7.	7.
8.	8.
9.	9.
10.	10.

மனப்பாட வசனம்

மத்தேயு 25:40

பின்னர் மன்னவர் உங்களுக்கு உண்மையைக் கூறுகிறேன். இங்குள்ள என் மக்களில் மிகவும் சாதாரணமான யாருக்கேனும் நீங்கள் ஒன்றைச் செய்திருந்தால் நீங்கள் அதை எனக்கே செய்ததாகும் என்று கூறினார்.

தீர்மானம்

ஆண்டவரே! இன்று முதல் எனக்கு எப்போதெல்லாம் உதவ வாய்ப்பு ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் உதவுவேன்.

நீதிமொழிகள் 3:27

உன்னால் முடிந்த எல்லா நேரத்திலும் உன் உதவியைத் தேவையானவர்களுக்குச் செய்.

துதிக்க

1. ....

2. ....

3. ....

ஜெபிக்க

1. ....

2. ....

3. ....

இறுதி ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே! கடந்த பத்து வாரங்களாக எங்கள் குணங்களில் மாற்றம் ஏற்படுத்தின வேதபாடத்தை கற்க உதவியதற்காக நன்றி. இன்று முதல் எங்களை உம்மைப்போல நன்மை செய்கிறவர்களாக சுற்றித்திரிய உதவி செய்யும். எனக்கு கிடைக்கப் போகும் சான்றிதழுக்காகவும், உமது விலையேறப்பெற்ற வேதாகமத்திற்காகவும் நன்றி. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்!

சங்கீதம் 103 : 1-2

1. என் ஆத்துமாவே கர்த்தரைத் துதி! என் ஒவ்வொரு அவயங்களே அவரது பரிசுத்த நாமத்தைத் துதியுங்கள்.

2. என் ஆத்துமாவே கர்த்தரைத் துதி! அவர் உண்மையிலேயே தயவுள்ளவர் என்பதை மறக்காதே.

பாடல்கள்

பாடல் : 1

அகிலத்தையும் ஆகாயத்தையும்
உந்தன் வல்ல பராக்கிரமத்தாலே
ஆண்டவர் நீர் சிருஷ்டித்தீரே
உந்தன் நல்ல கரத்தினாலே
ஆகாதது ஒன்றுமில்லை உம்மால்
ஆகாதது ஒன்றுமில்லை
சர்வ வல்லவரே கனம் மகிமைக்குப் பாத்திரரே
ஆகாதது என்று ஏதுவுமில்லை உம்மால்
ஆகாதது ஒன்றுமில்லை

Our Lord God
Thou has made the heavens
And the earth by Thy great power
Our Lord God
Thou hast made the heavens
And the earth by thine outstretched arm

Nothing is too difficult for Thee... No
Nothing is too difficult for Thee

O praise the Mighty God,
Great in counsel And mighty in deed
Nothing nothing absolutely nothing
Nothing is too difficult for Thee.

பாடல் : 2

இயேசு என்னும் நாமத்தில் (2)
ஜெயம் நமக்குண்டு
இயேசு என்னும் நாமத்தில் (2)
பேய்கள் பறந்தோடும்
இயேசு நாமத்தில் நிற்கும்போது
யார் நமக்கெதிர் நிற்பாரோ
இயேசு இயேசு நாமத்தினில
ஜெயம் நமக்குண்டு

In the name of Jesus, (2)
We have the victory
In the name of Jesus, (2)
Satan will have to flee
When we stand in the name of Jesus
Tell me, who can stand before?
In the mighty name of Jesus
We have the victory!

பாடல் : 3

இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன் (3)
பின்நோக்கேன் நான் பின்நோக்கேன் (2)
சிலுவை என் முன்னே உலகம் என் பின்னே (3)
பின் நோக்கேன் நான் பின் நோக்கேன் நான் (2)

I have decided to follow Jesus (3)
No turning back, no turning back (2)
The cross before me, the world behind me (3)
No turning back, no turning back (2)

பாடல் : 4

என் இயேசுவால் ஆகாததொன்றுண்டோ?
என் இயேசுவால் ஆகாததொன்றுண்டோ?
என் இயேசுவால் ஆகாதது என் இயேசுவால் ஆகாதது
என் இயேசுவால் ஆகாததொன்றுண்டோ?

என் இயேசுவால் ஆகாததொன்றில்லை!
என் இயேசுவால் ஆகாததொன்றில்லை!
என் இயேசுவால் ஆகாதது என் இயேசுவால் ஆகாதது
என் இயேசுவால் ஆகாததொன்றில்லை!

Is anything too hard for the Lord?
Is anything too hard for the Lord?
Is anything too hard, is anything too hard?
Is anything too hard for the Lord?

No, nothing is too hard for the Lord!
No, nothing is too hard for the Lord!
No, nothing is too hard, no nothing is too hard
No, nothing is too hard for the Lord!

பாடல் : 5

என் உள்ளம் தேவன்பால் பொங்கி வழியுதே
இயேசு என்னை இரட்சித்தார்
நான் ஆடிப்பாடுவேன்
எவரும் அறியாரே என் உள்ளம் பொங்குதே
என் உ்ள்ளம் பொங்கி (4) வழியுதே

It's bubbling, It's bubbling
It's bubbling, in my soul
I am singing, I am dancing

Since Jesus made me whole
No folks can understand me
How can I keep it quiet
It's bubbling bubbling bubbling
Bubbling bubbling day and night.

பாடல் : 6

இராஜாதி இராஜா கர்த்தாதி கர்த்தா
மகிமை அல்லேலூயா (2)
இயேசு / சமாதானப் பிரபு
மகிமை அல்லேலூயா (2)

King of Kings and Lord of Lords Glory, Hallelujah!
King of kings and Lord of Lords Glory, Hallelujah!
Jesus, Prince of peace Glory, Hallelujah!
Jesus Prince of peace Glory, Hallelujah! - as a round-

பாடல் : 7

இயேசு கிறிஸ்து மாறாதவரே
மாறாதவரே மாறாதவரே
ஆமென் இயேசு கிறிஸ்து மாறாதவரே
நித்திய நித்தியமாய்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா

He is the same unchanging Jesus
unchanging Jesus (2)
Yes, He is just the same
unchanging Jesus
Through eternity - halleujah (7)

பாடல் : 8

ஓ தேவனுக்கு மகிமை தூக்கி எடுத்தார்
என்னைத் தூக்கி எடுத்தார் இயேசு
தம் கரத்தை நீட்டி இரட்சித்தாரே
ஓ தேவனுக்கு மகிமை - நான்
இயேசுவை நேசிக்கிறேன்
மேன்மேலும் நேசிக்கிறேன்
அக்கரையில் நின்று நானும் அவரை
என்றென்றும் வாழ்த்துவேன்

Oh Glory to God he has lifted me up
He has lifted me up I know
He reached out his hand
And he lifted me up
I love Him more and more (2)
And when I stand up on the other shore
I'll praise Him more and more

பாடல் : 9

அவர் சமூகம் என் சந்தோஷமே
அது நிறைவான சந்தோஷமே
என் பாத்திரம் நிரம்பி நிரம்பி வழியுதே
ஆனந்தம் பேரானந்தமே

In His presence there is fullness of joy (2)
My cup is overflowing
More than overflowing
Fullness blessed fullness of joy

பாடல் : 10

நான் இயேசுவை நேசிக்கிறேன் (2)
நான் அவர் அருகில் நித்தம் தங்கிடுவேன்
நான் இயேசுவை நேசிக்கிறேன்

I love him better every day(2)
Close by His side I will abide
I love Him better every day

பாடல் : 11

துதி கனம் மகிமையுமக்கே
ஓ எல்லாமுமே ஓ எல்லாமுமே
துதி கனம் மகிமையுமக்கே
ஓ நீரே ராஜாவே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம் மிக ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
ஓ நீரே ராஜாவே
துதி கனம் மகிமையுமக்கே
ஓ எல்லாமுமே ஓ எல்லாமுமே
துதி கனம் மகிமையுமக்கே
ஓ நீரே ராஜாவே

Blessing and honour and glory be Thine
And glory be Thine and glory be Thine
Blessing and honour and glory be Thine
For Thou art on the throne
Praise Him, Praise Him,
All ye saints adore Him,
Praise Him, Praise Him,

For He is on the throne-Hallellujah!
Blessing and honour and glory be Thine
And glory be Thine and glory be Thine
Blessing and honour and glory be Thine
For Thou art on the throne

பாடல் : 12

ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார்
என் உள்ளத்தில் அவர் ஜீவிக்கிறார்
துன்பத்தில் என் நல் துணை அவரே
என்றென்றும் ஜீவிக்கிறார்

Jesus lives yes Jesus lives
Jesus lives within my heart
He is my help in times of troubles
For ever Jesus lives

பாடல் : 13

எண்ணெய் பூசிக் காயங்கள் ஆற்றியே
திராட்சை ரசத்தால் என் உள்ளம் தேற்றியே
மரணத்தருவாயில் என்னை அவர் கண்டார் அன்பால்
எரிகோ நகர் வீதிதனிலே
எந்தன் நல்ல இயேசு
என் சிந்தை நிறைந்தார்
எந்தன் நல்ல இயேசு
என் சிந்தை கவர்ந்தார்
எந்தன் நல்ல இயேசு என் சிந்தை நிறைந்தார்
என்றென்றும் என் சிந்தை நிறைந்தார்

He poured in the oil and the wine
The kind that restoreth my soul
He found me bleeding and dying
On the Jericho Road
And He poured in the oil and the wine
Jesus Jesus Jesus
I've got Him on my mind (3)
I have Jesus on my mind

பாடல் : 14

இயேசு என்னை கைவிட மாட்டார்
அவர் என்னைக் கைவிட மாட்டார்
கடும் புயல் வரினும்
பெருங் காற்று வீசினும்
அவர் என்னைக் கைவிட மாட்டார்

He will never let go my hand(2)
Though the storms may come
And the winds may blow
He will never let go my hand

பாடல் : 15

துதி செய் துதி செய்
காலையிலும் துதி மாலையிலும் துதி
துதி செய் துதி செய்
என்றென்றும் இயேசுவை துதி

Praise Him! Praise Him!
Praise Him in the morning
Praise Him in the noon-time.
Praise Him: Praise Him!
Praise Him when the sun goes down
Love him! Love Him!
Trust Him! Trust Him!
Thank Him! Thank Him!
Serve Him! Serve Him!

பாடல் : 16

உள்ளம் நன்றியால் பொங்கி
கர்த்தர் வாசல் செல்லுவேன்
எல்லைதோறும் துதிகள் சொல்லுவேன்
வல்லவர் தந்த நன்னாள் அது
இந்நாளென்பேன்
என்றும் மகிழ்வேன் சந்தோஷம் நல்கினார்
என்றும் மகிழ்வேன் சந்தோஷம் நல்கினார்
தேவன் என்னில் சந்தோஷம் நல்கினார்

I will enter His gates with thanksgiving in my heart
I will enter His courts with praise
I will say this is the day that the Lord has made
I will rejoice for He has made me glad.
He has made me glad, He has made me glad
I will rejoice for He has made me glad
He has made me glad, He has made me glad
I will rejoice for He has made me glad.

பாடல் : 17

யோகோவாயீரே என் கர்த்தரே
உம் கிருபை எனக்கு போதுமே (2)
என் தேவைகள் எல்லாவற்றையும்
தேவன் தந்து என்றும் ஆசீர்வதிப்பார்
தம்முடைய தூதருக்குக் கட்டளையிட்டு
யோகோவாயீரே காத்துக்கொள்வார்
என்னை என்னை
யோகோவாயீரே காத்துக்கொள்வார்

Jehovah Jireh, my provider
His grace is sufficient for me
For me, for me
His grace is sufficient for me
My God shall supply all my need
According to his riches in glory
He gives His angles charge over me
Jehovah Jireh cares for me, for me, for me
Jehovah Jireh cares for me

பாடல் : 18

துதி அல்லேலூயா பாடுவோம் (2)
துதி அல்லேலூயா (2)
துதி அல்லேலூயா பாடுவோம்

வேகமே இயேசு வருவார் (2)
வேகமே இயேசு (2)
வேகமே இயேசு வருவார் (2)

இராஜாதி இராஜா இயேசு தான் (2)
இராஜாதி இராஜா (2)
இராஜாதி இராஜா இயேசு தான் (2)

Sing Hallelujah to the Lord
Sing Hallelujah to the Lord
Sing Hallelujah Sing Hallelujah
Sing Hallelujah to the Lord

Jesus is coming back again (2)
Jesus is coming back (2)
Jesus is coming back again

Jesus is still the king of king (2)
Jesus is still the king (2)
Jesus is still the king of king

Sing Christ is risen from the dead (2)
Sing Christ is risen (2)
Sing Christ is risen from the dead

பாடல் : 19

சர்வ சிருஷ்டிக்கும் எஜமானன் நீரே
சர்வ சிருஷ்டியை காப்பவர் நீரே
உள்ளத்தின் நிறைவால் போற்றுகிறோம்
என்றும் மகிழ்ந்தே தொழுவோம்
அல்லேலூயா (7) ஆமென்

வானம் பூமி ஒழிந்துபோனாலும்
உம் வார்த்தை என்றும் மாறாதே
என் மாமிசம் அழுகி ஒழிந்துபோம்
விசுவாசி என்றும் பிழைப்பான்
அல்லேலூயா (7) ஆமென்

You're the Master of all creation
Protector, Preserver, Almighty
Our hearts are filled with praises for Thee
Hallelujah (7) Amen
Heaven and earth shall pass away
You word will never fail
My flesh will be destroyed and be gone
The just shall live by faith
Hallelujah (7) Amen

பாடல் : 20

தேனிலும் மதுரமாமே (2)
இயேசு தேனிலும் மதுரமாமே
ருசித்துப்பார் அவர் நல்லவர்
இயேசு தேனிலும் மதுரமாமே (2)

He tastes like honey in the rock
For He tastes like honey in the rock
O taste and see that the Lord is good
For He tastes like honey in the rock

இயேசு கிறிஸ்து நம்மை கிறிஸ்தவரா[illegible]குவதற்கல்ல,
'மனிதர்களாக' மாற்றுவதற்[illegible]வந்தார்!
ஆண்டவருடன் உறவு கொ[illegible] மனிதன்
அனைத்து முயற்சிகளையும் [illegible] ஆனால்
அதில் மனிதன் தோல்வியையே [illegible]கிறான்!

ஆனால், இயேசு கிறிஸ்து தமது மரணம்,
உயிர்த்தெழுதல் மூலம் ஆண்[illegible]வருடன்
உறவுகொ[illegible]கான வழியை மனிதனுக்கு
உண்டாக்கினார். அவரை ஏற்றுக்கொள்வதின் மூலம்
நாம் அவ[illegible]கிறோம்

[illegible] நம் [illegible]டைய

[illegible] அவரில்
[illegible]க்

[illegible]

இந்நூலை [illegible] குழு[illegible] சேர்ந்து முறையாக
[illegible] மூலம், தெளிவாக வேதாகமத்தை புரிந்து
கொள்வதோடு, அவருடைய சீடராக நீங்கள் நிச்சயம்
மாறமுடியும்.

BIBLE LEAGUE

Post Box No. 177, Trichy - 620 001.